பக்கங்கள் 12 விலை சதம் 20

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...


வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 4-3-62 ஞாயிறு | இதழ் 38



அண்ணாத்துரை தோற்றுவிட்டாரா? இல்லை, இல்லை, சென்னைச்சட்டசபையில் தமது கட்சிக்கு முன்பிருந்ததை விட நாலு மடங்கு இடங்களைப் பிடித்து வெற்றியின் உச்சிக்கே ஏறிவிட்டார்!



"கண்ணு உன் கன்னக் கதுப்பு என் எண்ணமெலாம் ஈர்த்து இழுக்கிறதே!" என்கிறார் நடிகை சாவித்திரி?



அமெரிக்காவின் அந்தஸ்தை ஆகாயமளவு உயர்த்தி விட்ட வானவெளி வீரர் திரு கிளென்.

## எமது கருத்து

# தமிழா, நீ கெட்டிக்காரன்!

தமிழா, நீ கெட்டிக்காரன்!

தென்னாட்டில் இருக்கின்ற தாய்நாட்டுத் தமிழனே, உன்னைத் தான் பாராட்டுகிறோம்!

தேர்தலில் சரியான முறையில் நீ உனது கடமையை நிறைவேற்றிவிட்டாய்!

காங்கிரஸ் கட்சிக்கு ஆட்சிபீடம் ஏறும் வாய்ப்பை நீ இன்னொரு தடவை தந்திருக்கிறாய்—ஆனால் அவர்களது சில ஸ்தானங்களை இழக்கச் செய்ததன் மூலம் ஒரு எச்சரிக்கையும் விடுத்திருக்கிறாய். இம்முறை 'ஏறுக்கு மாறாக' நடந்தால் அடுத்த முறை ஆட்சியே கைவிட்டுப் போய்விடும் என்று எச்சரித்திருக்கிறாய்!

ஜனநாயகம் சிறப்பாக வளர நல்லதொரு எதிர்கட்சி தேவை என்பது உனக்குத் தெரியும். அதனால்தான் தி. மு. கழகத்தைப் பலமிக்க கட்சியாகப் பரிமளிக்கச் செய்திருக்கிறாய். பல வழிகளாலும் தென்னாடு புறக்கணிக்கப்பட்டு வரும் நிகழ்ச்சி உனது உள்ளத்தை வருத்தியிருக்க வேண்டும். தி. மு. கழகத்தை பலமடையச் செய்ததன் மூலம் வடநாட்டு அரசை எச்சரித்திருக்கிறாய். 'இனிமேலும் தென்னகம் புறக்கணிக்கப்படுமானால் பிரிவினை வந்தே தீரும்!' என்று சொல்லாமல் சொல்லியிருக்கிறாய்!

நல்லது! நீ செய்த கெட்டித்தனமான காரியம் என்னதெரியுமா? —உதிரிக் கட்சிகளைப் பூண்டோடு அழித்திருக்கிறாய். தீவிரவாதப் போக்குடைய சுதந்திரா கம்யூனிஸ்ட் கட்சிகளை மண் கவ்வ வைத்திருக்கிறாய்!

நாட்டு முன்னேற்றத்திற்கு 'நடு வழி' தான் சிறந்தது என்று காட்டும் முறையில் அந்த வழியில் செல்லும் காங்கிரஸ், தி. மு. க. கட்சிகளை வெற்றியடையச் செய்திருக்கிறாய்!

ஆனால்—

அண்ணாவின் தோல்வி! — அதுவும் நல்லதுதான்! அண்ணா வென்றிருந்தால், வெற்றி பெற்ற தி. மு. கழக எதிர்க்கட்சித் தோழர்கள் 'அண்ணா இருக்கிறார், பார்த்துக் கொள்வார்' என்று தங்கள் பொறுப்பை மறந்திருப்பார்கள்!

வெற்றி பெற்ற ஐம்பது தி. மு. கழகத்தினரும் அண்ணா மாதிரிப் பணியாற்றக்கூடிய முறையில் நீ ஆக்கி வைத்திருக்கிறாய்!

தமிழா நீ கெட்டிக்காரன்!

— ஆசிரியர்,

## என்ன சேதி?

**‘திருக்குறள் மணி’**

அண்மையில் நடைபெற்ற தமிழ் மறைக் கழகத்தின் பதினேராவது ஆண்டுக் கூட்டத்தில், தேர்வு நடத்தித் ‘திருக்குறள் மணி’ எனும் பட்டத்தை வழங்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் அடுத்த ஆண்டு அலுவலர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. கா.பொ. இரத்தினம், செயலாளர்-பண்டிதர் செ. சிவலிங்கம், துணைச் செயலாளர் - மதியாபரணம், பொருளாளர்-வித்துவான் இ. சி. தோதிநாதன்.

தமிழ் மறைக்கழக உறுப்பினராயிருந்த கலைப்புலவர் நவரத்தினத்தின் மறைவுக்குக் கழகத்தின் பரிவைத் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்ருட்டது

**மாதர் சங்கக் கூட்டம்!**

சரவணை மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் அமைப்புக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. புது வருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

**ராஜிஞமா!**

யாழ்ப்பாணம் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் திரு எஸ். கே. ராஜா, தமது தலைவர் பதவியிலிருந்தும் அங்கத்தவர் பதவியிலிருந்தும் ராஜிஞமா செய்து விட்டார்.

**கதிரவன் கலைக்கூடம்.**

கொழும்பு கதிரவன் கலைக்கூடத்தினரின் நான்காவது தயாரிப்பான ‘கொலைகாரி’ என்ற நாடகச் சிறப்பிதழ் வந்து கிடைக்கப்பெற்ருேம்.

**இட மாற்றம்.**

நீர்கொழும்பு விவேகானந்த வித்தியாலய ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. டி. ஏ. இராமலிங்கம் கடந்த 1—3—62 முதல் அம்பாறை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

**குழந்தை எழுத்தாளர் சங்கம்.**

சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் புது வருடத் தலைவராக திரு. நெ. சி. தெய்வசிகாமணி தெரிவு செய்யப்பட்டுள்ளார். குழந்தைக்கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா ஆலோசகராகக் கடமையாற்றுவார்.

# திரை மறைவில்

### புதிய கவர்னர் ஜெனரல்:

புதிதாக கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ள திரு. கோபல்லவா யார் தெரியுமா? —நமது பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடைய மாமனார்தான்! அவருடைய மகளைத்தான் பிரதமருடைய சகோதரரான திரு. ரத்வத்தை திருமணம் செய்திருக்கிருர்.

### அனில் முனசிங்காவின் மனைவி:

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எப்படி நம்முடைய நாட்டில் சிலர் திட்டம் தீட்டினர்களோ அதே மாதிரியான ஒரு ‘முயற்சி’ கானு நாட்டிலும் சில மாதங்களுக்கு முன்னுல் நிகழ்ந்தது. அங்கும் தக்க தருணத்தில் நடவடிக்கை எடுத்ததன் விளைவாக அரசாங்கம் தப்பிப் பிழைத்தது. சதி சம்பந்தமான விஷயங்களை விளக்கி கானு அரசாங்கம் ஒரு ‘வெள்ளை அறிக்கை’யை வெளியிட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில்தான் நமது அரசாங்கம் சதி சம்பந்தமாக வெளியிட்ட ‘வெள்ளை அறிக்கை’யும் இருக்கிறது.

சதி சம்பந்தமான பாராளுமன்ற விவாதங்களில் பேசும்போது ‘சதிக்குள் ஒரு சதி’ என்ற தொனியில் டாக்டர் என். எம். பெரைரா பேசினர். அப்படி அவர் பேசும்போது அரசாங்கத்தின் தகவல் இலாகாவைச் சேர்ந்த ஒருவர் கானு தூதுவர் காரியாலயத்துக்குச் சென்று அவர்கள் வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கையின் பிரதியொன்றைப் பெற்று வந்ததாகக் கூறினர்.

டாக்டர் என். எம். பெரைராவுக்கு இந்த விஷயம் எப்படித் தெரிய வந்ததென்று நீங்கள் யோசிக்கலாம்! — சமசமாஜக் கட்சியிலுள்ள பெருந்தலைவர்களுள் ஒருவர் திரு. அனில் முனசிங்கா. இவருருடைய மனைவியார்தான் கானு தூதுவர் காரியாலயத்தில் தகவல் அதிகாரியாக இருக்கிருர். இவர் முன்னர் ‘லேக் கவுஸில்’ வேலை பார்த்தவர். டாக்டர் என். எம். பெரைராவுக்கு வெள்ளை அறிக்கை இரகசியம் தெரியவந்த முறை இப்போது ஒரு மாதிரி விளங்குகிறதா?

### புகழ்பெற்ற தந்தையும் அவருடைய மகனும்:

சில காலத்திற்கு முன்னுல் டயஸ் என்ற பெயர் படைத்த நீதிபதி ஒருவர் இலங்கையில் இருந்தார். நீதி மன்றங்களின் சுதந்திரத்தைப் பேணுவதில் நீதிபதி டயஸுக்கு இருந்த ஆர்வம் போற்றத் தக்கது. நீதி நிர்வாகங்களில் அரசாங்கத் தலையீட்டை வன்மையாகக் கண்டித்த பெரிய மனிதர்களுள் அவரும் ஒருவர். அந்தப் பெரிய மனிதரின் மகன் தான் இன்றைய தினம் அரசாங்கத்தையே தனது இஷ்டம் போல ஆட்டிப் படைக்கும் வல்லமை படைத்த நம்முடைய நிதிமந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா!

### அவர் வாழ்க!

சமீபத்தில் நமது கல்வி இலாகாவினர் புதிதாக பதின்மூன்று வித்தியாதரிசிகளை நியமித்திருக்கிருர்கள். இப்படி நியமிக்கப்பட்டுள்ள பதின் மூன்று பேருமே முஸ்லீம்கள்தான். இது சம்பந்தமாக விண்ணப்பங்கள் கோரி விளம்பரம் செய்தபோதே ‘முஸ்லீம்கள் மட்டும்தான் விண்ணப்பிக்கலாம்’ என்று விளம்பரம் செய்திருக்கலாம்! மறந்து விட்டார்கள் போலும்—அடுத்த முறையாவது அப்படிச் செய்வார்களா! இதற்கெல்லாம் காரணமான ‘பெருமான்’ எவரோ அவர் நீடுழி வாழட்டும் (?).

### ‘விளக்கெண்ணெய்’ தூதுகோஷ்டி:

நம்முடைய ‘ஈயார் எஸ்ஸார்’ குமாரசாமியைத் தலைவராகக் கொண்ட தூதுகோஷ்டி ஒன்று இப்போது வெளிநாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறது. விஷயம் தெரிந்த ஒரு சிலர் இந்தத் தூதுகோஷ்டியினரை ‘விளக்கெண்ணெய் தூது கோஷ்டியினர்’ என்று அழைக்கிருர்கள். காரணம் என்ன தெரியுமா?— அரசாங்கத்தின் ‘பெட்ரோல் கார்ப்பரேஷ’னைச் சேர்ந்தவர்கள் இவர்கள். அந்த நிறுவனத்துக்கான எண்ணெய் வாங்கும் விஷயமாக இத் தூது கோஷ்டியினர் ஐக்கிய அரபுக் குடியரசு, இங்கிலாந்து, ருமேனியா, சோவியத் ரஷ்யா, ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளனர். இன்னும் எத்தனை நாடுகளில் ‘சுற்றி உலாத்தப்’ போகிருர்களோ தெரியவில்லை? ‘விளக்கெண்ணெய்’ விஷயமாகச் சுற்றித் திரியும் கோஷ்டியினருக்கு ஏன் அந்த அடைமொழி பொருந்தாது? தாராளமாக ‘விளக்கெண்ணெய்’ தூது கோஷ்டியினர் என்று அழைக்கலாம்!

### கேள்வியும் பதிலும்.

**கேள்வி:** திரு. அண்ணுத்துரையை தோல்வியடையச் செய்ததன்மூலம் தமிழ்நாட்டு மக்கள் தங்களுக்குப் ‘பிரிவினை’யில் நம்பிக்கையில்லை என்பதைக் காட்டி விட்டார்கள் அல்லவா?

**பதில்:** ஆனல், முன்னர் இருந்ததைக் காட்டிலும் பெருந்தொகையான தி. மு. க. அங்கத்தவர்களை அசெம்பிளிக்குத் தேர்ந்தெடுத்ததன் மூலம் ‘பிரிவினையின் அவசியத்தை’ உணர்த்தி விட்டார்களே!

### மலிவுப்பதிப்பு வெளியீட்டு விழா.

> புரட்சித் தந்தை
>
> **பிலிப் குணவர்த்தனு எழுதிய**
>
> **‘அரசியல் பாதையில் சில புதிய உத்திகள்’**
>
> என்னும் புத்தகத்தின் வெளியீட்டுவிழா விரைவில் நடைபெறும்.
>
> இப்புத்தகத்திற்கு பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் முன்னுரை எழுதியிருக்கிருர்.
>
> பி. கு. இப்போதுதான் இந்த உத்திகளைப் பரீட்சிக்க ஆரம்பித்திருக்கிருேம். வெற்றி கண்டதும் புத்தக உருவில் எழுதி வெளியிடுவோம். அதுவரைக்கும் பொறுத்திருங்கள்.

### ‘புதின’மும் ‘முரசொலி’யும்

‘வெற்றிப் பாதையில் தி. மு கழகம்’ என்ற தலைப்பின்கீழ் இரண்டு வாரங்களுக்கு முன்னுல் ‘புதின’த்தில் ஒருசெய்திவெளியானது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

“நமது ஈழத்துப் பத்திரிகைகள் வெளியிடுகின்ற தென்னிந்தியத் தேர்தல் செய்திகள் உண்மை நிலையைப் பிரதிபலிக்கவில்லை என்பது ஒரு வருந்தத்தக்க உண்மையாகும்........ ... தி. மு. க. வினருக்கு இம்முறை பன்மடங்கு ஆதரவு பெருகியிருப்பதையும் காங்கிரசுக்கும் தி. மு. க. வுக்குமிடையே மிகக் கடுமையானபோட்டி இருப்பதையும் தெரிந்து கொள்ள முடிகிறது. கடந்த தேர்தலைக் காட்டிலும் இம்முறை தி. மு. க. அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றப்போவது உறுதி!......” என்று அந்தச் செய்தியில் சொல்லியிருந்தோம். இந்தச் செய்தியின் ‘அட்சரம் பிசகாத உண்மை’யை வாசகர்கள் இப்போது உணர்ந்திருப்பார்கள்!

சென்ற 22-2-62 தேதியில் வெளியான,—தஞ்சாவூரில் பெரும்வெற்றிஈட்டியுள்ள கலைஞர் மு. கருணநிதியை ஆசிரியராகக்கொண்ட ‘முரசொலி’ நாளிதழ் இச்செய்தியை முதலாம் பக்கத்தில் பெரிய எழுத்துக்களில் ‘தி. மு. கழகத்தைப்பற்றி ஈழத்து ஏட்டின் மதிப்பீடு’ என்ற தலைப்பில் மறுபிரசுரம் செய்துள்ளது.

— “அம்பலத்துறைவோன்”

● யாழ்ப்பாணப்பெண்ணுக்கும் கொழும்புப்பெண்ணுக்குமுள்ள வித்தியாசம் ● பாசமலர் ● பெரியார் ஈ. வெ. ரா. ● ஐரோப்பாவின் நோயாளி ○ பஞ்சசீலம் ● தபால்பெட்டியில் போட்டகடிதத்தை திருப்பி எடுக்க முடியுமா?

# கேள்வி-பதில்!

ரமணன்

அ. பஞ்சாட்சரம்,
வட்டக்கச்சி.

கே:- உண்மையிலேயே பெண்கள் ஆண்களிடம் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்று. அது எதுவாக இருக்கலாம்?

ப:- மணிப் பர்ஸ்!

திருமலை ராஜு, திருமலை.

கே:- யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் அநேகமாக ஒஸ்டீன் கார்களை விரும்புவதேன்?

ப:- ஒஸ்டீன் கார் மிகவும் பழைய, ஆதிகாலத்துச் சாமான். யாழ்ப்பாணத்தான் பழமை விரும்பி என்பதற்கு இதுவோர் எடுத்துக் காட்டு ஆனாலும் பள்ளந்திட்டிகளுக்குப் பேர்போன யாழ்ப்பாணவீதிகளுக்கு இந்தக் காரால் தான் ஈடுகொடுக்க முடியுமென்பதிலும் ஓரவு உண்மையிருக்கிறது பழைய பார்ட்ஸ் களுக்குக் கொழும்பைஎதிர்பாராமல் யாழ்ப்பாணத்திலேயே இலகுவாகப் பெறமுடியுமென்பதும் ஒரு காரணம்.

நாகூர் ஏ. பாவா,
காத்தான்குடி.

கே:- சைவப் பெருமக்கள் வழிபடும் தெய்வமாகிய பிள்ளையாரின் வயிறு பெரிதாக இருப்பதேன்?

(குறிப்பு:- இது கிண்டலல்ல)

ப:- சுருங்கச் சொல்லின் கணபதி ஓங்காரவடிவினன் ஓங்காரத்துள் யாவும் அடக்கம் என்பதே பெருவயிற்றின் கருத்தாகும். மேலும். விபரம் வேண்டுமாயின் திருப்பராய்த்துறை, இராமகிருஷ்ண தபோவனத்துச் சுவாமி சித்பவானந்தா அவர்கள் இயற்றியுள்ள கடவுளின் வடிவங்கள் என்னும் நூலைப் படிக்கவும்.

என். கருப்பையா. நோர்வுட்

கே: பாசமலர் படத்தில் தங்கவேலுவின் உண்ணு விரதம் தேவைதானு?

ப:- உண்ணு விரதம் தேவையோ என்னவோ படத் தயாரிப்பாளருக்குப் பணம் தேவை என்பது நிச்சயம்.

எம் டபிள்யூ. எம். கலீல்.
வெலிகாமம்

கே:- தி. மு. க, சுதந்திரக் கட்சிக் கூட்டுமுயற்சியை பெரியார் வெங்காயக் கூட்டென்ருரே! நாஸ்திகரான அவரும் ஆஸ்திகரான குன்றக்குடி அடிகளாரும் இணைந்து ஏன் தேர்தல் பிரசாரம் செய்தார்கள்?

ப:- ஆமாம் இன்று பெரியார் தனது கொள்கைக் கப்பாற்பட்ட எத்தனையோ விஷயங்களில் தலையிடுகிருர். இதனுல் இப்பெழுதெல்லாம் பெரியாரின் பெயர் செல்லாக் காசாகிக் கொண்டுவருகிறது.

மு கரீம், மன்னூர்.

கே:- அண்ணு தோற்றதால் காங்கிரஸுக்கு ஏதாவது நஷ்டமுண்டா?

ப:- நிச்சயமாக! காங்கிரஸ்கட்சியின் தவறுகளை எடுத்துக் காட்டி அவர்களை நல்வழி நடத்த ஊன்றுகோலாயிருந்த தீபம் அண்ணு

கே. குஷிநாதன், காரைநகர்.

கே: அள்ள அள்ளக் குறையாதது எது?

ப:- அறிவு மட்டுமல்ல. இலங்கை அரசாங்கத்தின் ஊழல்களுந்தான்!

கே:- எளிதில் நம்மால் மறக்க முடியாதவர்கள் யார்?

ப:- கடன்காரர்கள்,

இ. சோமசுந்தரம், பசறை.

கே:- தமிழர்களிடமுள்ளகட்சிகளையெல்லாம் கலைத்துவிட்டு முற்போக்கு எண்ணங் கொண்ட எந்தக் கட்சியுடனுவது சேர்ந்து ஒரு சமரச இலங்கையை உருவாக்கினுல் என்ன?

ப:- விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை தமிழனிடமிருந்தால் இன்று அவனுக்கு ஏன் இந்த இழிநிலை?

தி. ஆறுமுகம், கந்தகெதர.

கே:- ஐரோப்பாவின் நோயாளி எனப்படும் நாடு எது?

ப:- துருக்கி, கடந்தபல வருடங்களாக இந்நாட்டால் ஐரோப்பியர்கட்கு ஏதோ தலையிடி ஓயவில்லை.

யோ. அமலதாஸ், திருமலை,

கே:- பஞ்சசீலம் என்கிருரே நேரு, அப்படியென்ருல் என்ன?

ப:- கள், களவு, பொய், காமம் கொலை ஆகிய பஞ்சமா பாதகங்களிலிருந்து மனித சமுதாயம் விடுபட வேண்டுமென்பதே. அநேகமாக இக்கொள்கையை எல்லாச் சமயங்களும் போதிக்கின்றன.

கே. ராஜ், கொழும்பு.

கே:- யாழ்ப்பாணப் பெண்ணுக்கும் கொழும்புப் பெண்ணுக்கும் நாகரீகத்தில் என்ன வேறுபாடு?

வித்தியாசம் 3 அங்குலம்தான்! யாழ்ப்பாணப் பெண்கள் 3 அங்குலம்; கொழும்புப் பெண்கள் 6 அங்குலம்!

நா. பாலசுந்தரம்,
யாழ்ப்பாணம்.

கே:- உமது மனைவி என்னை விரும்புகிருளாமே?

ப:- என்ன செய்வது! நாய்க்குட்டி, பூனைக்குட்டி, கிளிப்பிள்ளை, அணில்பிள்ளை இப்படியானவைகளில் அவளுக்கொரு பைத்தியம்; இவற்ருேடு இன்னுென்று புதிதாகச் சேர்ந்துவிட்டது? போனுல் போகட்டும்!

## பரிசுக் கேள்வி

ஐ. மார்க்கண்டன்,
ஊர்காவற்துறை.

கே;-சுதந்திரமென்ருலென்ன? அதற்கேன் இத்தனிச் சிறப்பு?

ப:-தான் விரும்பும் நல்லகாரியங்களை செய்வதற்குஒருவனுக்கிருக்கும் தனிப்பட்ட உரிமையே சுதந்திரமாகும். இதுதான் சுதந்திரத்தின் தனிச்சிறப்பு!

கு. ச, சண்முகலிங்கம்,
கதிர்காமம்.

கே:- உம் மனைவிக்கு நீர் பயமா?

ப:- சும்மா போங்காணும், நான் அவவுக்குப் பயப்படுவேனு? அவகையிலிருக்கும்துடைப்பங்கட்டை, விளக்குமாறு, விறகுக்கட்டை, அகப்பைக்காம்பு இவற்றுக்குத்தான் கொஞ்சம் பயம்,

மு. செல்வநாயகம்,
அனுராதபுரம்.

கே:- ஒருகடிதத்தைத் தபால் பெட்டிக்குள் போட்ட பின்னர் நாம் அதைத் திருப்பி எடுக்க முடியுமா?

ப:- ஊ ஹூம், எடுக்க முடியாது. அப்படி எடுப்பது குற்றமாகும். தபாற்பெட்டிக்குள் போடப்பட்ட கடிதம் அரசாங்கத்தின் உடமை: அதைத் திரும்பப் பெறவிரும்பினுல் முதலில் போஸ்ட்மாஸ்டருக்குவிண்ணப்பிக்க வேண்டும், உங்கள் கடிதத்தை எடுத்து அவர் பிரத்தியேகமாக வைப்பார். அது உங்கள் கடிதந்தானென ஒரு விண்ணப்பபத்திரத்தில் ஒரு ரூபாய் முத்திரை ஒட்டி விண்ணப்பித்தால் - விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் கடிதம் மூன்று நாட்களில் திருப்பிக்கொடுக்கப்படும்.

எஸ். பி. முகம்மது,
கொழும்பு—11

கே. இராணுவச்சதி வெற்றி பெற்றிருந்தால் .....

ப:- நீங்கள் இக்கேள்வியைக் கேட்டிருக்கமாட்டீர்கள்.

## கல்லடி வேலன் கதை!

1860-ம் ஆண்டு, மார்ச்மாதம் 7—ம் திகதியன்று, யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கிலுள்ள வசாவிளானில் தோன்றிய ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையவர்கள், ஈழத்தின் பிரசித்தி பெற்ற விகட வேந்தராகவும் திகழ்ந்தார். அவரது நினைவுதினத்தை முன்னிட்டு, அவர் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான சம்பவம் ஒன்றை இங்கே பிரசுரித்துள்ளோம்—

கல்லடி வேலன் அவர்கள் 'சுதேச நாட்டியம்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்த காலம் அது. பினங்கில் வசித்து வந்த கணபதிப்பிள்ளை என்ற தம் நண்பர் ஒருவரின் அழைப்பின் பேரில், கல்லடி வேலன் பினங்குக்குச் சென்றிருந்தார்.

பினங்கில் பொன், வெள்ளி ஆபரணங்கள் செய்யும் பத்தர் ஒருவர், திரு. கணபதிப்பிள்ளையின் நண்பராக இருந்தார் இலங்கையிலிருந்து வந்திருக்கும் நண்பரான கல்லடி வேலனை, பினங்கில் இருக்கும் தமது மற்றொரு நண்பரான பத்தரின் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனார் கணபதிப்பிள்ளை. பத்தருக்கு கல்லடி வேலனை அறிமுகம் செய்து வைக்கும் பொழுது, "இவர் இலங்கையிலிருந்து வந்திருக்கிருர். என் நண்பர். சிறந்த கல்விமான்!" என்று சொல்லி அறிமுகம் செய்து வைத்தார்.

பத்தர் அவர் சொன்னது ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. கல்லடி வேலனை மேலும், கீழுமாக நன்ருக நோட்டம் விட்டார். பத்தரின் முகத்தில் அலட்சியச் சிரிப்பு ஒன்று அரும்பியது. பின் கல்லடி வேலனைப் பார்த்து, "நீங்கள் என்ன வித்தை கற்றிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அவர் பேச்சில் பரிகாசம் தொனித்தது.

கல்லடி வேலனுக்கு விஷயம் விளங்கிவிட்டது பத்தர் தம்மைப் பரிகாசம்தான் செய்கிருர் என்பதை அறிந்ததும், அவருக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று எண்ணி, தம் மடியிலிருந்து பத்து வெள்ளிகளை (சிங்கப்பூர் நாணயம்) எடுத்துக் கீழே வைத்துவிட்டுப் பத்தரைப் பார்த்து, 'ஐயா. பத்தரே! உமது மடியிலிருந்து ஒரு அரை வெள்ளியை எடுத்து இப்படித்தாரும் நான் பத்தரை வெள்ளியாக்கிக் காட்டுகிறேன்!" என்று சிரித்துக்கொண்டே சொன்னுர்.

பத்தருக்கு அவர் சொன்னதன் அர்த்தம் புரியவில்லை. திருதிருவென்று விழித்துக்கொண்டிருநதார் ஆனுல். அருகிலிருந்த கணபதிப்பிள்ளைக்கு கல்லடி வேலன் சொன்னதன் அர்த்தம் புரிந்துவிட்டது. சிரிப்பை ஒரு விதமாக அடக்கிக்கொண்டு, "என்ன ஓய், பத்தரே! பார்த்தீரா?... நீர் தங்கத்தையும் வெள்ளியையும் கொண்டு ஆபரணம் மாத்திரம் தானே செய்கிறீர்? நீர் கல்லடி வேலனிடம் ஒரு அரை வெள்ளி கொடுத்தால். அவர் உம்மையே வெள்ளியாக்கி விடுவாராமே!... ..." என்று சொல்லிவிட்டுக் கடகடவென்று சிரித்தார்.

"பத்தரே! நான் கற்ற கலை என்னவென்று தெரிகிறதா? உம்மை நகை செய்விக்கவும் முடியும்! .......என்று அமைதியாகக் கூறினுர் கல்லடிவேலன்.

வெட்கத்தைமறந்துபத்தரும்பலமாகச்சிரித்துவிட்டார்.

இப்பொழுது பத்தருக்குக் கல்லடிவேலனைப்பற்றி நன்கு புரிந்துவிட்டது. வாய்கொடுக்காமல் தப்பித்தால் போதுமென்றிருந்தது அவருக்கு.

"உம்மைச் சிரிக்கச் செய்விக்கவும் முடியும்" என்ற கருத்தில்தான் கல்லடிவேலன் "உம்மை நகை செய்விக்கவும் முடியும்" என்று கூறினுர் என்பதை இங்கு விளக்க வேண்டிய அவசியமில்லையல்லவா?

—தாஸ்


மனதிற்கு உகந்த, தரம் குறையாத

தங்கம் பவுண்

நகைகளுக்கு

சிறந்த இடம்



வ. முத்தையா அன் சன்ஸ்

நகை இரத்தின வியாபாரம்

201., காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# இத்தால்... சகருலம் அறிவது!

### கதைகதையாம், காரணமாம்... ...

புத்தம் புதுச் செய்திகளைப் புது மெருகுடன் உடனுக்குடன் அளித்துவரும் புதினத்தில் இருந்து வந்த குறை நீங்கிவிட்டது!

ஆமாம, சிறு கதை இல்லாப் பெருங்குறையை நிவர்த்திசெய்து விட்டீர்கள். பாராட்டுகிறோம்.

திருகோணமலை, —செல்வி கமலா ஏரம்பு.
—செல்வி சரோ ஏரம்பு.

### கட்டாயம் வாங்குவோம்!

சென்ற 18—2—62 இதழில் வெளியான 'கடவுளின் கதை'யும், 25—2-62 இதழில் வெளியான 'மொட்டுக்குள்' என்ற சிறுகதையும் வெகு ஜோர்! ஒவ்வொரு வாரமும் புதுப் புதுப் புதினங்களை எங்களுக்கு அளித்துவரும் "புதினம்" வருகிற வாரமுதல் பன்னிரண்டு பக்கங்களுடன் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி. 'புதினம்' இருபது சதம் அல்ல, இன்னும் கூட்டினாலும் வாசகர்களாகிய நாங்கள் கட்டாயம் வாங்குவோம் என்பது உறுதி!

கொழும்பு, —நவாலியூர் த. பரமலிங்கம்.

### புதினமடி புதினம்!

கன்னல் மொழிபேசி, இன்ப மணம் வீசி, வண்ண எழில் ஓவியமாய்ப் பவனி வரும் 'புதினம்' காண என்மனம் பூரிப்படைகிறது!

வேலணை, செ. சண்முகவடிவு.

### 'அடல்ப் ஈச்மன்' அபாரம்!

புதினத்தில் ஆரம்பமாகியுள்ள அடல்ப் ஈச்மன் பற்றிய புதிய தொடர் அம்சம் அபாரம்! ஆசிரியர் அதை எழுதும் பாணி அழகாக இருக்கிறது.

குருநகர், செல்வி. பி. கிறேஸ்.

### வீர மங்கை!

நேற்று மாலை கொட்டாஞ்சேனை சந்தியில் கோட்டைக்குப் போவதற்காக பஸ்ஸுக்குக் காத்திருந்தேன் 'கியூ' வில் இன்னும் பலரும் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒரு அழகான இளம்பெண் மிகவும் அடக்கத்துடன் நின்றுகொண்டிருந்தாள். பஸ் வந்தது. கூட்டம் முண்டியடித்துக் கொண்டு ஏறியது. ஒரு கால் சட்டை அணிந்த வாலிபன் குறிப்பிட்ட அந்தப் பெண்ணைப் பின்னாலிருந்து இடித்துக்கொண்டு ஏறினான். பஸ்ஸிலும் அந்தப் பெண்ணையே அவன் நோட்டம் விட்டுக்கொண்டிருந்தான்.

குறிப்பிட்ட ஒரு இடத்தில் பஸ் நின்றதும் அந்தப் பெண் கீழே இறங்கினாள். அவனும் இறங்கினான். இறங்கும் பொழுது அந்தப் பெண்ணிடம் அவன் என்ன சேட்டை செய்தானோ தெரியாது, அந்தப் பெண்ணின் முகம் கோபத்தால் சிவந்து விட்டது. "என்னை என்னவென்று நினைத்துக்கொண்டாய்? கால் சட்டை அணிந்து, கண்ணியமானவனைப்போல் இருக்கிறாய், பெண்களிடம் இப்படியா நடந்து கொள்வது?" என்று சொல்லி, தன் செருப்பைக் கழற்றி அவனை அடிக்க ஆயத்தமாகிவிட்டாள்!

ஒரு தமிழ்ப் பெண் இப்படித் துணிந்தது போற்றத்தக்கது. பெண்களைக் கண்டவுடன் பல்லிளிக்கும் 'கால்சட்டைக் காவாலி'களுக்கு இது ஒரு நல்ல படிப்பினை!

கொழும்பு—13 —எஸ். பரமானந்தம்.

### பயங்கரக் கண்கள்!

போனவாரம் புதினத்தின் முன் பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருந்த அடல்ப் ஈச்மனின் கனல் கக்கும் பயங்கரக் கண்கள் கிடுகிடுக்க வைத்துவிட்டன. அந்தப் பயத்திலேயே கடைக்காரரிடம் 15 சதத்தைக் கொடுத்துவிட்டுப் புதினத்தை வாங்கி விட்டேன்!

கண்டி, —எம். மீராசாஹிப்

### தனிச் சிறப்பு!

இந்தியத் தேர்தல் பற்றிய புதினத்தின் அபிப்பிராயம்—பத்திரிகை உலகிலேயே புதினத்தின் தரத்தை உயர்த்திவிட்டது!

கண்டி, வி. கனகரத்தினம்

# தமிழ் நாட்டு தேர்தல் கண்ணோட்டம்!

உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயகத் தேர்தல் நடந்து முடிந்து, அதன் முடிவுகளும் வெளிவந்து விட்டன

இந்தியாவின் தேர்தலைத் தான் குறிப்பிடுகிறோம்!

சென்றசிலவாரங்களாகவே உலகத்தின் கவனம்முழுவதும் இந்தியாவின்மீதுதான் இருந்தது.

நமது ஈழத்தின் தமிழ்வாசகர்கள் பொதுவாகவே இந்தியத் தேர்தல் முடிவுகளை அறிய அக்கறை காட்டி வந்தபோதிலும், தமிழ்நாட்டுத் தேர்தல் முடிவுகளை அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வத்தையும் பரபரப்பையும் காட்டி வந்தார்கள்.

### காங்கிரஸ் வெற்றி

தமிழகத்தில் அசைக்கமுடியாத பலத்தோடு காங்கிரஸ் மறுபடியும் வெற்றியீட்டியுள்ளது. தமிழ் நாட்டுச் சட்ட சபையில் காங்கிரஸ் பெற்றிருக்கின்ற வெற்றியைப் பார்க்கும்போது சந்தேகமில்லாமல் மறுபடியும் காமராஜர்தான் முதலமைச்சராக வருவார் என்றுசொல்லத்தோன்றுகிறது. ஆனால் காங்கிரசார் பெருமைப்படக்கூடிய முறையில் அவர்களது வெற்றி அமைந்திருக்கவில்லை. சென்றசட்டசபையில் காங்கிரசின் பலம் 150 ஆக இருந்தது. ஆனால் இந்த எண்ணிக்கை இப்போது 138ஆகக் குறைந்துள்ளது. தமிழகத்து வாக்காளர்கள் காங்கிரசுக் காளைகளின் மூக்கணாங்கயிற்றை ஒரு சுண்டுச் சுண்டி இழுத்திருக்கிறார்கள் என்பதைத் தான் இது காட்டுகிறது.

### தி. மு. கழகத்தின் வெற்றி!

காங்கிரசின் தலையிலே ஒரு தட்டுத் தட்டிய வாக்காளர்கள் தி. மு. கழகத்தின்முதுகில் 'சபாஷ், பாண்டியா' என்று சொல்லி செல்லமாகத் தட்டிக் கொடுத்திருக்கிறார்கள் சென்ற சட்டசபையில் 13 இடங்களை மட்டுமே பெற்றிருந்த தி. மு கழகம் இப்போது 50 இடங்களைக் கைப்பற்றியிருக்கிறது. இது பாராட்டத் தக்கசாதனை என்பதில் சந்தேகமில்லை!

### அண்ணாவின் தோல்வி

பெருமைப்படத்தக்க முறையில் தி. மு கழகம் வெற்றி பெற்றிருக்கின்ற அதே நேரத்தில் அதன் தலைவரும், ஆயிரமாயிரம் இளைஞர்களின் வழிகாட்டியுமான திரு. சி. என். அண்ணாத்துரைதோல்வியடைந்திருக்கிறார் இவரது தோல்விக்கான காரணங்கள் பல. அவற்றையெல்லால் ஆராய வேண்டியஅவசியம்இப்போது நமக்குக் கிடையாது. தி. மு. கழகத்தின் பாராட்டத்தக்க வெற்றிக்கு அண்ணாவின் தோல்வி ஒரு 'திருஷ்டி பரிகாரம்' என்று சொல்லலாம்!

### 'பெரும் புள்ளி'கள் வெற்றி!

காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த பிரபலஸ்தர்களான திருவாளர்கள் சி. சுப்பிரமணியம், எஸ். வி. ராமசாமி, டாக்டர் சுப்பராயன், மரகதம் சந்திரசேகரன், காமராஜ், பக்தவத்சலம். கக்கன், அனந்தநாயகி போன்றோரும் தி. மு கழகத்தின் பெரிய மனிதர்களான திருவாளர்கள் மு கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன், அரங்கண்ணல், நாஞ்சில் மனோகரன் ஆகியோரும், சுதந்திராக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவரான திரு. சா. கணேசனும் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர்களான திருவாளர்கள் கல்யாணசுந்தரம், அனந்த நம்பியார் ஆகியோரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

### நடிகர் ராஜேந்திரன்

தேனி தொகுதியில் தியாகராசன் என்ற காங்கிரஸ் பிரமுகரோடு சென்ற தடவை போட்டியிட்டு மிகச் சொற்ப வாக்குகளால் தோல்வியுற்ற நடிகர் எஸ் எஸ். ராஜேந்திரன் இம்முறை அதே பிரமுகரை பெருவாரியான வாக்குகளால் தோற்கடித்திருக்கிறார்.

### கீழே விழுந்தவர்கள்.

கம்யூனிஸ்ட் கட்சிப் பிரபலஸ்தர்களான கே. டி. கே. தங்கமணி. பார்வதி கிருஷ்ணன், ப. ஜீவானந்தம் போன்றோர் படு தோல்வியடைந்திருக்கிறார்கள் சுதந்திராக் கட்சிப் பிரமுகர்களான பேராசிரியர் ரத்னசாமி. எஸ் எஸ் மாரிசாமி போன்றோரும் மண் கவ்வியிருக்கிறார்கள் மற்றைய தோல்விகளுள் காங்கிரஸ் மந்திரியான லூர்த்தம்மாளின் தோல்வியும், தி. மு. கழகப் பிரமுகர்களான அன்பழகன். சத்தியவாணிமுத்து என்போரது தோல்விகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

### ராஜாஜியின் மகன்.

ராஜாஜியின் மகனான திரு. சி ஆர். நரசிம்மன் சென்ற பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர். ராஜாஜி புதுக்கட்சி ஆரம்பித்த போதும் அதில் சேராது தொடர்ந்து காங்கிரஸ் கட்சியிலேயே இருந்து வந்தார். இம்முறையும் காங்கிரஸ் சார்பிலேயே போட்டியிட்டார். தி. மு. கழகத்தைச் சேர்ந்த ராஜாராம் என்பவர் இவரைத் தோற்கடித்துள்ளார்,

### சுதந்திராவும் கம்யூனிஸ்ட்டும்.

இடது சாரிக் கட்சிகளுள் தீவிரமான போக்குடையது கம்யூனிஸ்ட் கட்சி, வலதுசாரிக் கட்சிகளுள் தீவிரமான போக்குடையது சுதந்திராக் கட்சி. கம்யூனிஸ்ட் கட்சிக்கு சென்ற சட்ட சபையில் 4 ஸ்தானங்கள் இருந்தன. இப்போதோ 2 ஸ்தானங்கள் தான் கிடைத்துள்ளன. அதுவுமல்லாமல் சென்ற பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த தங்கமணி, பார்வதி கிருஷ்ணன், போன்றோரும் கட்சியின் பிரபல தலைவரான ப. ஜீவானந்தமும் படுமோசமான முறையில் தோல்வியடைந்திருக்கிறார்கள். இதே கதிதான் சுதந்திராக் கட்சிக்கும் நேர்ந்திருக்கிறது ஆனால் அதன் நிலை 'கம்யூனிஸ்டுகளை விடப் பரவாயில்லை' என்பதாகும். சட்ட சபையில் 6 ஸ்தானங்களை அவர்கள் கைப்பற்றியுள்ளார்கள்,

நடுவழியில் செல்வதைத்தான் தமிழ் நாட்டு மக்கள் விரும்புகிறார்கள் என்பதையே இவ்விரு தீவிரவாதப் போக்குடைய கட்சிகளின் தோல்விகளும் காட்டுகின்றனவோ?

### தனிப்பட்ட மனிதர்களின் கட்சிகள்

'தமிழ் தேசியக் கட்சி' 'நாம் தமிழர் கட்சி' 'முஸ்லீம் லீக்' போன்ற தனிப்பட்ட மனிதர்களை தலைவர்களாக மாற்றுவதற்காகத் தொடக்கப்பட்ட கட்சிகள் எல்லாம் படுமோசமான தோல்வியை அணைத்துக்கொண்டுள்ளன. இந்தக் கட்சிகளுக்கு ஒரு ஸ்தானம் கூடக்கிடைக்கவில்லை. தி. மு. கழகத்திலிருந்து பிரிந்து சென்று தனிக்கட்சி அமைத்து 'சிங்கத்தின் குகையிலேயே அதனை எதிர்க்கப் போறேன்' என்று கூறிக்கொண்டு தென் சென்னை பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிட்ட தமிழ் தேசியக் கட்சித் தலைவரான திரு. ஈ. வி. கே. சம்பத்தின் முடிவு மிகப் பரிதாபமானது. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தி. மு. க, நாஞ்சில் மனோகரன் பெரு வெற்றி பெற்றுள்ளார்! சொந்தப் பத்திரிகைகளின் பலத்தை நம்பி தலைவராகி விடலாம் என்ற நினைவோடு 'நாம் தமிழர் கட்சி' அமைத்த ஆதித்தனாரின் கதியும் இதேதான். பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்கும், முஸ்லிம் லீக்கிற்கும் கூட இதே நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.

### நூறு படங்கள் நடித்து முடிந்ததும்

# சினிமாவிலிருந்து சிவாஜி ஓய்வு பெறுவார்!

## மாதத்துக் கொருபடம் நடிக்க புதுத் திட்டம்.

நூறு படங்கள் நடித்து முடித்து விட்டதும் சினிமா உலகிலிருந்து விலகி ஓய்வெடுக்கப்போவதாக அறிவிக்கிறார் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்.

தான் சினிமா உலகில் புகுந்த கடந்த பத்து ஆண்டுகளில் ஓய்வு ஒழிவு இல்லாமல் நடித்துவருகிறாராம் சிவாஜி. அதோடு வருடத்தில் சராசரி எட்டுப் படங்கள் நடித்து முடித்துள்ளாராம். சமீபத்தில் வெளிநாடுசெல்லவிருக்கும் சிவாஜி தாய்நாடு திரும்பியதும் மாதம் ஒரு படம் நடித்து முடிக்கக்கூடிய விதமாக ஒரு புதுத்திட்டம் வகுத்திருக்கிறாராம். காலையில் ஒரு படம் மாலையில் ஒரு படமாக நடிக்காமல் தொடர்ந்து ஒரு மாதம் நடித்து ஒரு படத்தை முடித்துவிட்டு அடுத்த படத்தில் நடிக்க ஆரம்பிப்பதே அவரது புதிய திட்டம்.


காலையும் மாலையும் வெவ்வேறு படங்களில் நடிப்பதால் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தைத் திறம்பட நடிக்க முடியாது என்பது அவர் அபிப்பிராயம். காலையில் சோகக் கட்டத்திலும் மாலையில் சிருங்காரக் கட்டத்திலும் நடிக்கும்போது உணர்ச்சி பாவத்தை திறம்பட வெளிப்படுத்த முடியாது என்கிறார் சிவாஜி. 'இப்போதுள்ள படங்கள் நடித்து முடிந்ததும் இனி மேல் எனது சொந்தப்படங்களில் மட்டுமே நடிப்பேன்' என்கிறார் நடிகர் திலகம்.

### சாரதா வருகிறாள்!

'சங்கிலித்தேவன்' என்ற படத்தை தயாரித்த ஏ.எல்.எஸ். புரொடக்ஷன்சார் தங்கள் அடுத்த தயாரிப்பின் வேலையில் அமோக கவனம் செலுத்தி வருகிறார்கள். அந்தப் படத்திற்கு அவர்கள் 'சாரதா' என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

ஒரு ஏழை வாலிபன் செல்வந்தர் ஒருவரின் திருமகளைக் காதலித்து மாலையிட்டுத் தன் குடிசைக்கு அழைத்து வரும் காட்சி அண்மையில் படமாக்கப்பட்டது.

எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, எம். ஆர். ராதா ரங்கராவ் ஆகியோர் நடித்து வரும் இப்படத்தின் கதை வசனத்தைக் கே. எஸ் கோபாலகிருஷ்ணன் எழுதியிருப்பதுடன், அவரே டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார். கவிஞர் கண்ணதாசனின் பாடல்கள் இதில் பிரமாதமாக இருக்குமாம்!



கட்டழகி வைஜந்திமாலாவுக்கு அருகில் ஒய்யாரமாக நிற்கும் அந்த முண்டாசுகட்டிய மீசைக்காரனை.......... இல்லை இல்லை, மீசைக்காரியை உங்களுக்குத் தெரிகிறதா? 'கொஞ்சும் சலங்கை' படத்தைப் பாருங்கள், தெரியும்!

## படித்த படிப்பு இதுதான்

★

சினிமா நடிகர்களும், நடிகைகளும் பல படங்களில் பட்டதாரிகளாகவும், மேதைகளாகவும் நடிக்கிறார்கள் இவை எல்லாம் நடிப்புக்காகத்தான் என்றாலும், அவர்கள் உண்மை வாழ்க்கையில் எவ்வளவு படித்திருக்கிறார்கள் என்பதை வாசகர்கள் அறிந்து கொள்ள விரும்புவது இறற்கை! இதோ, அவர்கள் படித்த படிப்பு கீழே தரப்பட்டுள்ளது—

- ✳ சரோஜாதேவி — மூன்றாம் பாரம்
- ● பத்மினி — வீட்டிலேயேபிரைவேட் படிப்பு.
- ✳ பானுமதி — மூன்றாம் வகுப்பு.
- ● சாவித்திரி — நான்காவது பாரம்.
- ✳ விஜயகுமாரி — நான்காவது பாரம்.
- ● சிவாஜி கணேசன் — ஐந்தாவது வகுப்பு.
- ✳ எம். ஜி. ஆர் — மூன்றாவது வகுப்பு.
- ● ஜெமினி கணேசன் — பி. ஏ.
- ✳ எஸ். எஸ். ராஜேந்திரன் — மூன்றாம் பாரம்.
- ● எம். ஆர். ராதா — சில நாட்கள்!
- ✳ சந்திரபாபு — ஸீனியர் கேம்பிரிட்ஜ்.
- ● தங்கவேலு — பதினைந்து நாட்கள்!
- ✳ சௌகார் ஜானகி— மூன்றாம் பாரம்.
- ● பாலாஜி — எஸ். எஸ். எல். ஸி.
- ✳ கருணாநிதி — முதல் பாரம்.
- ● அசோகன் — பி. ஏ.
- ✳ ஜமுனா — எஸ். எஸ். எல். ஸி.
- ● பந்துலு — ஸ். எஸ். எல். ஸி.
- ✳ விஜயலட்சுமி — டு_ல் மெட்ரிக்.
- ● சாரங்கபாணி — மூன்றாம் வகுப்பு.
- ✳ குமாரி கமலா — நான்காம் பாரம்

### பலே பாண்டியா!

பத்மினி பிக்சர்ஸார் தயாரித்து வரும் 'பலே பாண்டியா' என்றபடம் பரணி ஸ்டுடியோவில் துரிதமாக வளர்ந்து வருகிறது.

இந்தப் படத்தில் சிவாஜி கணேசனும், வசந்தியும்இணையாக நடிக்கின்றனர். மேலும். எம். ஆர். ராதா, தேவிகா, ஆகியோர் தந்தையும், மகளுமாக நடிக்கின்றனர். மா. ரா. கதை—வசனம் எழுதியுள்ள இப்படத்தை, தயாரிப்பாளர் திரு. பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்கிறார். கண்ணதாசன் இயற்றியுள்ள பாடல்களுக்கு விஸ்வநாதன் — ராமமூர்த்தி இசை அமைக்கின்றனர்.

### அண்ணாவின் அன்பு!

ஜெயராம் பிக்சர்ஸார்தயாரிக்கவிருக்கும் 'அண்ணாவின் அன்பு' என்ற படத்தில் பாலாஜியும், வசந்தியும்இணையாக நடிக்கவிருக்கின்றனர்!

இப்படத்தின் கதையை'காயல் அன்பு' எழுதியிருக்கிறார். இப்படத்தில் கருணாநிதி. சாயிராம், எஸ் ஏ அசோகன் ஆகியோரும் நடிக்கவிருக்கின்றனர்,

## நடிகன் ஒரு பொதுச்சொத்து!

பொதுமக்கள் மகிழ்வுக்காக வேடமிடும் நடிகன் தன்னுடைய வயிற்றுக்கும்வழிதேட வேண்டாமா? இத்தொழில் நிரந்தரமானதல்ல. இன்றிருக்கும் நாளைபோகும். நடிகனது காலம் சிறு எறும்புக்குள்ளதைப்போன்றது. ஒருஎறும்பு ஊர்ந்துகொண்டேயிருக்கிறது. நாமும் பின்னால் செல்லவேண்டுமானால் சென்றுகொண்டிருக்கலாம். அதன் மேல் விரலை வைத்து அழுத்தினால் அது இறந்துபோகும். அதைப் போன்றதுதான் நடிகனுடையகாலமும்'' என்று ஹாஸ்ய நடிகர் திரு ராமராவ் கூறுகிறார்.

இயற்கை அளித்துள்ள செல்வங்களான மழை, காற்று, சூரியன் அகியவை அனைவருக்கும் பொதுவாக இருப்பதுபோல் கலைஞர்கள் அனைவர்க்கும் பொதுவாகவிருக்கிறார்கள்.

மக்களை மகிழ்விப்பதற்காக ஒரு நடிகன் இரவென்றும் பகலென்றும் பாராது, மழையென்றும் வெயிலென்றும் பாரது உழைக்கிறான். அவன் இதயமுள்ளவன். சிறிதளவு உணவு கிடைத்தாலும் தன் இனத்தோடு பகிர்ந்துண்ணும் காக்கையைப் போன்ற இதயம் அவனுக்குமுண்டு. அத்துணை ஒற்றுமை உணர்ச்சி உடையவன் நடிகன்.

நாடகக் கம்பெனியில் நடிக்கும்போது நாற்பதுபேர் ஒருபாயில் உட்கார்ந்து எல்லோரும் சாப்பிடுவோம். 'அத்தகையவர்கள் இன்று ஏன் பங்களாவும் காருமாக வாழ்கிறீர்கள்?' என்று கேட்கலாம். நடிகனென்றால் அவனும் மனிதனே. பலர்போல் தானும் சிறப்பாக வாழவேண்டும் என்ற ஆசை இருக்கத்தானே செய்யும்.'' என்று மேலும் திரு ராமராவ் கூறுகிறார்.

## எம். ஆர். ராதாவின் மகன் சந்திரபாபு!

எம். ஆர். ராதாவும், சந்திரபாபுவும் தந்தையும் மகனுமாக சரவணா பிலிம்சாரின் 'பாதகாணிக்கை' என்ற படத்தில் நடிக்கிறார்கள்.

இப்படத்துக்கான பிரமாண்டமான பங்களா செட் ஒன்றை நெப்டியூன் ஸ்டுடியோவில் தயாரிப்பாளர் வேலுமணி போட்டிருக்கிறார்.

ஜெமினிகணேசன், சாவித்திரி, அசோகன், ராஜம்மா, ஆகியோர் இப்படத்தில் நடிக்கிறார்கள். கதைவசனத்தை சோலைமலை எழுதியிருக்கிறார். டைரக்ஷன் பொறுப்பை கே. சங்கர் ஏற்றிருக்கிறார்.

# 'பூதந்தேவனர்' அரங்கு

## தற்சிறப்புப் பாயிரம்

'புதினம்' தனது பக்கங்களை அதிகரித்ததும், இலக்கிய அரங்கம் அமைத்த 'பூதன் தேவனர்' — வேறுயாருமல்ல நான் தான் — தோன்றி விட்டார். ஒரு காலத்தில் அரசியல்பூதரைவிட்டு 'கேசரி' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பல வித அரசியல் பிரச்சினைகளை ஆராய்ந்தார் ஒருவர். அவரின் தம்பியாக இந்த இலகியப் பூதர் இருக்கலாமோ? இல்லையில்லை. ஈழத்துக்கே சிறப்புத் தந்த சங்க காலப் பூதந்தேவனின் மறுபிறப்போ அல்லது வம்சாவழியோ? என்று பலர் சந்தேகிக்கலாம். எப்படியிருந்தால் என்ன? இலக்கியப் பூதன் தேவனர் சாமான்யப்பட்ட பேர்வழி அல்ல என்பதை முதற் கண் சொல்லிவைக்கிறேன். 'கல்கி' அவர்கள் தான் புனைப்பெயருக்குள் ஒளித்துக் கொண்டபோது எழுதியது இது:-

''என் குட்டை நானே ஏன் உடைத்து விடவேண்டும்? உண்மையில் புனைபெயர் வைத்துக்கொள்வதில் உள்ள அநுகூலம் இதுதான். பெயரைப் போட்டுக்கொண்டால் சாமான்யனுகிவிடுகிறேன். ஆனால் 'கல்கி', அவர் எவ்வளவு பெரிய மனிதராய்த்தான் இருக்கக்கூடாது. மகாவித்துவானுயிருக்கலாம். பண்டித சிரோன்மணியாய்இருக்கலாம் .........இன்னும் எவ்வளவோ பெரிய மனிதராய் இருக்கலாம். இவ்வளவு மகோந்நதமான பதவியை நான் ஏன் விடவேண்டும்''

அப்படித்தான், 'சாமன்யப்பட்ட பேர்வழியல்ல' என்பதற்கும் நினைத்திருப்பீர்கள்' நினையுங்கள். உங்கள் நினைவு நீடூழி வாழட்டும்,

இந்தப் பென்னம் பெரிய புனைபெயரை வைத்துக்கொண்டு இலக்கிய அரங்கில் எவற்றை நடமாட விடப்போகிறீர்? என்று கேட்கிறீர்களா? அவற்றின் பட்டியல் நீளமானது பழைய கதைகள், புதிய முயற்சிகள். முற்போக்குவாதம், பிற்போக்கு எழுத்துகள் பொழுது போக்கு இலக்கியம், நிதர்சனப் படைப்புகள், விளங்காத தமிழ்நடை புரியாத சொற்கள் இப்படி எத்தனை எத்தனையோ இருக்கின்றனவே அவற்றை எல்லாம் காட்டத்தான் போகிறேன் ஆற அமர இருங்கள்.

## ஒரு உருவகக்கதை

சமீபத்தில் நான் வாசித்த ஒரு உருவகக்கதை எனக்குப் பிடித்திருந்தது. பலருக்கும் இது பிடிக்கும் என்பதல்ல. பொருந்தும்என்பதால் இதைச் சொல்லுகிறேன். தலைக்குப் பொருந்தியவர்கள் இதன் கருத்தைத் தமக்குத் தெரப்பியாகப் போட்டுக்கொள்ளுங்கள்.

''காற்றே இல்லை. ஒரே புழுக்கம்'' என்ற குரல் கேட்டு எல்லா ஏடுகளும் தலை தூக்கிப் பார்த்தன. அலமாரியில் முதலிடத்தில் அமர்ந்திருந்த அகராதிதான் பேசியது.

சில ஏடுகள் சிரித்தன. ஏன் சிரிக்கிறீர்கள்? என அகராதி கோபமாகக் கேட்டது. ''உன் அறிவுக் கூர்மையைக் கண்டு'' எனத் துடுக்கான ஏடு ஒன்று பதில் கூறியது. ''என் அறிவையா பழிக்கிருய்? நான் உங்கள் தலைவன்! என்னிடம் இல்லாத சொற்களே கிடையாது'' என்றது அகராதி.

மீண்டும் சிரிப்பொலி.

மறுநாளிலிருந்து ...... ஒவ்வொரு ஏடும் வெளியே போய்வரத் தொடங்கியது. அந்த அகராதியை யாருமே தொடவில்லை.

''நாளை'' 'நாளை' என வரப்போகும் நாளிலே நம்பிக்கை வைத்து இருளிலும் புழுக்கத்திலும் அந்த ஏடுகளின் அரசன் தவித்தான்.

ஓராண்டு முடிந்தது. கணக்கெடுக்க எல்லா ஏடுகளும் திரும்பி வந்தன. திருமணமாகாததால் பொலிவிழந்து காணப்படும் கன்னியைப்போலப் புத்தம் புதிதாக அகராதி அலமாரியில் அப்படியே கிடந்தது. கிழிந்து அழுக்கடைந்த துடுக்கான ஏடு ஒன்று ''என்ன அகராதியாரே! ஒரு நாள் கூட இடத்தை விட்டு அசையவில்லையா?'' என்று கேட்டது.

''என்னிடம் இருக்கும் சொற்களைத் தெரிந்து கொள்ள இங்கு எவனுக்கு அறிவிருக்கிறது?'' இது அகராதியின் பதில்.

எல்லா ஏடுகளும் சிரித்தன. அழகற்ற கன்னி உலகம் குருடு என்று கூறுவதுபோல அகராதியும் பேசுவதாக அவை எண்ணியிருக்க வேண்டும்.

''அகராதியாரே! உன்னிடம் எல்லாம் இருந்தும் பயனில்லை. எது எப்படி இருக்கவேண்டுமோ அது உன்னிடம் அமையவில்லை. நீ வார்த்தைகளை வரிசையாக வைத்துள்ளாய்'' இது இலக்கிய விமர்சன ஏட்டின் வாதம்.

அகராதிக்கு அந்தப் பேச்சுப் பிடபடவில்லை.

வீதியில் ஒருவன் உரசக இனிமையாக ஒரு பாடலைப் பாடிக்கொண்டு போனுன்.

''அவன் என்னிடமிருந்து புதிதாகக் கற்றுக்கொண்ட பாட்டு அது'' என்றது அப்பாட்டைக் கேட்ட கவிதைத் தொகுப்பு.

''அவனுக்கு அப்பாடலில் இரண்டு சொற்களுக்குப் பொருள் புரியாதுதான். அதற்காக அவன் கவலைப்படவில்லை'' என்றது இலக்கிய விமர்சனம்.



கலைப் புலவர்

அவன் ஏன் தன்னை வந்து புரட்டிப் பார்க்கவிலலை என்பது அகராதிக்குப் பெரும் புதிராகவே இருந்தது.

## பாரதியாரின் திருக்குறள் சொற்பொழிவு

சென்ற மாசி மாதம் 20-ம், 21-ம் திகதிகளிலெல்லாம் கொழும்பு வானெலி திருவள்ளுவர் தின நினைவாக சிலவிஷயங்களை ஒலிபரப்பியது அப்போது எனக்கு மகாகவி பாரதியார் செய்த திருக்குறள் சொற்பொழிவுச் செய்தி ஒன்றும்பத்துக் குறளுக்குமேல் தெரியாத 'பம்மாத்து' அறிஞர்கள்-எழுத்தாளக்குஞ்சுகள் - செய்யும் திருக்குறள் ஆராச்சியும் நினைவில் மிதந்தன.

சென்னை முத்யாலுப்பேட்டை ஹைஸ்கூலில் பாரதியார் தலைமையில் திருக்குறள் பற்றிய கூட்டம் ஒன்று நடந்தது பிரசங்கம் ஆரம்பிக்கு முன் பயந்த சுபாவமுள்ள ஒருவர் பாரதியாரிடம் அரசியலைக் குறித்து அப்படி...இப்படி என்று தடைபோட்டார். பாரதியார் எழுந்தார்.

''உலகத்து நாயகியே எங்கள்
முத்துமாரியம்மா
எங்கள் முத்துமாரி''

என்று பாடத் தொடங்கிவிட்டார். கூட்டத்தில் இருந்தவர்களும் சேர்ந்து பாடினர்கள்.

'துணிவெளுக்க மண்ணுண்டு
எங்கள்
முத்து மாரியம்மா எங்கள்
முத்துமாரி
தோல்வெளுக்கச்சாம்பருண்டு
எங்கள்
முத்து மாரியம்மா எங்கள்
முத்துமாரி
மணிவெளுக்கச் சாணையுண்டு
எங்கள்
முத்து மாரியம்மா எங்கள்
முத்துமாரி.'

இந்த இடத்தில் பாட்டுத் தடைப்பட்டது 'முத்துமாரி, முத்துமாரி' என்று மேலும் மேலும் முழங்கினர் பாரதி. அவ்வாவேசம்மற்றவர்களையும் பற்றியது எல்லோரும்தம்மை மறந்து 'முத்துமாரி, முத்துமாரி' என்று அநுநாதம் செய்தார்கள். திருக்குறள் கூட்டம் தேவியின் பஜனைக் கூடமாக மாறிவிடும்போல் தோன்றியது. நல்லவேளை பாரதிக்குப் பாட்டு நினைவு வந்துவிட்டது

'மணிவெளுக்கச் சாணையுண்டு
எங்கள்
முத்து மாரியம்மா எங்கள்
முத்துமாரி
மனம் வெளுக்க வழியில்லையே
எங்கள்
முத்து மாரியம்மா எங்கள்
முத்துமாரி'

என்று மேலே மேலே பாடி பாட்டை முடித்தார் இறுதியில் திருக்குறளைப் பற்றி இரண்டே இரண்டு வரிகள் தான் சொன்னர்.

'கட்டுப்பாட்டுக்குள் நின்று கொண்டு என்னல் பேச முடியாது. திருக்குறள் நல்ல புத்தகம்; எல்லோரும் படிக்கவேண்டிய நூல்'

பாரதியாரைப் பேச விடாமல் செய்தது கட்டுப்பாடு ஆனல் இங்குள்ள அரசியல் அறிஞர்களும்-அரை குறைப் படிப்பாளிகளும்-மேடை புரியாமல் வந்து விழித்து விட்டுத் தமதுஅலம்புதல்களையெல்லாம் அவிழ்த்துவிட்டு இவையெல்லாம் தெரியவேண்டுமென்றால் திருக்குறளைப் படியுங்கள் என்று முடிக்கும் அழகை விபரிக்க 'மேடைக்கலை' என்றுஒரு நூல்தான் போடவேண்டும்.

ஈழத்து எழுத்தாளர்களைப் பற்றி ஏதாவது விபரம்தெரியவேண்டுமா? அவர்களே மறந்து போய்விட்ட அவர்களுடைய எழுத்தோவியங்களின் பிரதிகள் ஏதாவது தேவைப்படுகிறதா? — எதற்கும் இந்த 'பூதந்தேவனர்' கைகொடுத்துதவக்கூடிய மகா வல்லமை பொருந்தியவர். எழுத்தாளர்களையும்' அவர்களுடைய எழுத்துக்களையும் விமர்சனம் செய்வதில் இவருக்கு இணை இவரேதான்! 'பூதந்தேவனர்' என்ற புனை பெயரில் மறைந்திருக்கும் இவர் ஈழத்தின் மிக முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவர். சுவையான இலக்கியக் குறிப்புகளை வாரந்தோறும் புதினம் வாசகர்களுக்குத்தர இசைந்துள்ளார்.

## ஈழகேசரியே! வாழி நீ பெரிதே!!

'பாலர்க்கு வேண்டும்
பழமொழி; பாட்டு
பக்குவமான தமிழிற்
கவிதை;
சாலச் சிறந்தவர் கட்டுரைக் ,
கோவை;
தமிழில் மலர்ந்த சிறுகதைச்
செல்வம்;
கூலிக்கு மாரடிக்காத முயற்சி
குணம் பல கொண்டு
மலர்ந்த அரும்பு
போலிச் சரக்கல்ல;
ஆண்மையில் வாழ்ந்த
பொன்னைய வள்ளல்
அளித்து மறைந்தான்'

என்று ஈழத்து கவிஞர் ஒருவரால் விதந்தோதப்பட்ட ஈழகேசரிப் பொன்னையா நினைவு நாள் பங்குனி 31. அந்த நாளிலே ஈழகேசரி புனர் ஜென்மம் எடுத்து கலை, இலக்கிய, விஞ்ஞான ஏடாக மாதா மாதம் வெளிவரப்போவது ஈழத்து இலக்கிய வட்டாரங்களுக்குப் பெருமகிழ்வுகூரும் சங்கதியல்லவா? அதனல் ஈழகேசரியே! வாழி நீ பெரிதே!!' என வாழ்த்துகின்றேன்.

## கலைப் புலவர் க. நவரத்தினம் பிரிவு

'வாழ்க' என்று ஈழகேசரியின்வரவை வாழ்த்திய 'கை' ஓயமுன் அதனேடுமிகத்தொடர்புகொண்ட கலைப்புலவரின் பிரிவை எழுத வேண்டியிருக்கிறது என்ன செய்வது?

யாழ்ப்பாணத்தின் பொதுப் பணி பலவற்றில் பங்குகொண்டு அவற்றைச் சீர்பெற நடாத்தி, 'கலா நிலையம்' என்ற ஸ்தாபனத்தைத் தொடங்கி, ஞாயிறு என்ற கலையாக்கங் கருதிய மும்மாத வெளியீடொன்றை வெளியிட்டவர் அவர். அதுமாத்திரமல்ல. இந்திய சிற்ப வடிகள், ஈழத்துக் கலை வளர்ச்சி முதலிய கலைப்புத்தகங்களை எழுதிப் பெயர் பெற்றவர். வேதாந்தமே அவரது சமயக்கொள்கையாக இருந்தாலும், சைவசித்தாந்தம், வீரசைவம் முதலியன பற்றியும் நன்கறிந்து நூல்களை ஆக்கியுள்ளார் யாழ்ப்பாணக் குடிசைக் கைத்தொழில் சம்பந்தமாக அவர் எடுத்த முயற்சிகளும், சிறு வெளியீடுகளும் அவரை என்றும் நினைவுகூரச் செய்யக்கூடியன. நான்காம் தமிழ் விழாவை அவர் யாழ்ப்பாணத்தில் நடாத்திய முறையைக்கண்டு தமிழ் நாட்டுப் பேராசிரியர்கள் பலரே வியந்தனர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராய் இருந்து ஓய்வுபெற்று 64 வயதில் இவ்வுலகவாழ்வை நீத்த கலைப் புலவரவர்கள், என்றென்றும் தமிழ்மக்கள் நெஞ்சில் நீங்காமல் வாழ்ந்து வருவார்!

சிறு கதை

# சிந்திக்கத் தொடங்கினான்

"ஐயோ, என் பிள்ளையைப் போய்ப் பார்த்தீர்களா? மண்டையைப் பிளந்து விட்டான்களே......" என்று ஒப்பாரிவைக்க ஆரம்பித்தாள் பெற்றவள். வெளியே எங்கெல்லாமோ சுற்றிவிட்டு அப்பொழுதுதான் வீட்டுக்குள் நுழைந்த சிவசம்பு 'எல்லாம் போய்ப் பார்த்து விட்டுத்தான் வருகிறேன்' என்றார் அசிரத்தையாக.

"நாற்காலியால் தூக்கி யாரோ அடித்திருக்கிறான். தலையில் சிறிய காயம் பட்டுவிட்டது. அவ்வளவுதான். நீ சொல்வது போல் மண்டையொன்றும் பிளந்து போகவில்லை. அடித்தவன் அவசரக்குடுக்கை. தன்கட்சியை ஆணித்தரமாக பேசிவெல்ல முடியாமல் ஆத்திரத்தில் அறைந்திருக்கிறான். உன் மகன் பிழையான கொள்கை உடையவனானாலும் பேசுந்திறமை பெற்றிருக்கிறான். அந்த மட்டிலும் அவனை நான் பாராட்டுகிறேன்." என்றார் சிவசம்பு. பாவம் அந்த அம்மையார் முகத்தை 'உர்' ரென்று வைத்துக்கொண்டு உள்ளே போனாள்.

சிவசம்பு தம்பதிகளின் ஒரே மகன் முருகவேள். கொஞ்சம் துடியானவன். சிறுவனாக இருக்கும் போதே வாயாடித்தனமாகப் பேசுவான். இன்று அவன் பேச்சாளன், எழுத்தாளன்.

அனுபவப்படியில் கால் வைக்காத இளமட்டங்களோடு சேர்ந்து இலக்கியச் சர்ச்சை செய்வான் நாளடைவில் அந்த இளமட்டங்களின் குழுவிற்கு அவன் தலைவனுமாகிவிட்டான்.

"கிண்டலா செய்கிறீர்கள்?"

"கிண்டலல்ல. அப்பா, உண்மையைத்தான் சொல்லுகிறேன். அருங்கண்ணன்" என்பவன் உன்னை அடித்தானாமே ...... அதீதன் ஆதரவோடு விசாரித்தார்.

"அருங்கண்ணன்...அயோக்கிய ராஸ்கல்..." உறுமினான் முருகவேள். அதீதன் அமைதியோடு பேசாமலிருந்தார். திடீரென்று பேசினான் முருகவேள்.

"நீங்களே சொல்லுங்கள், தற்கொலை செய்யவேண்டும் அல்லது கற்பை விற்க வேண்டும். என்ற நிலை ஒரு பெண்ணுக்கு ஏற்பட்டால் அவள் எதைத்தேர்ந்தெடுக்க வேண்டும்?"

"தற்கொலையை"

"உம், உங்களைப் போய்க் கேட்டேனே, நீங்களும் அருங்கண்ணனின் தம்பி தானே..."

## தாழையடி சபாரத்தினம்

"நீ கேட்டாய், நான் பதில் சொன்னேன். ஏன் என்று என்னிடம் நீ விளக்கங் கோராமல் சினக்கிறாய். எல்லாம் உனக்குத்தான் தெரியும், மற்றவரெல்லாம் மகாமட்டம் என்று இந்த வயசிலிருந்தே நீ எண்ணத் தொடங்கி விட்டாயானால் உன் வருங்கால வளர்ச்சி குன்றிவிடும். நீ பேசுவதைக் குறைத்துக் கொண்டு பிறர் கருத்துக்களை உன்னிப்பாகக் கவனி. பின்னால் தனிமையிலிருக்கும் போது உனது கருத்துக்களோடு பிறர் கருத்துக்களையும் ஒப்பிட்டுப்பார். மேலெழுந்த வாரியாக எதையும் சிந்தியாதே. ஆற அமர உட்கார்ந்து ஆழ்ந்து சிந்தனை செய்."

> பசி, கற்பு இரண்டும் முட்டி மோதுகிறது. 'பசியினால் மாண்டு போக நேர்ந்தாலும் கற்பை விலைபேசாதே' என்கிறார் இந்த எழுத்தாளர்........

எழுத்தாளர்கள்கூடி இலக்கிய சர்ச்சைசெய்கிறார்கள் என்றதும் கணக்கெழுதுபவனும் தன்னை எழுத்தாளன் என்று எண்ணிக்கொண்டு வந்து விட்டான் கூட்டத்துக்கு. சர்ச்சை ஏதோ ஒரு பாணியில் போய்க் கொண்டிருந்தது. வாக்கு வாதம் தடித்தது......அதன் பலன்தான் இன்று அவன் மண்டையில் கட்டுப்போட்டுக்கொண்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறான்.

காயம் சிறியதுதான். இரண்டொரு நாட்களில் சுகமாகி வீட்டுக்கு வந்து விட்டான் முருகவேள். அவன் காயமடைந்த செய்தியறிந்து பார்க்க வந்தார் அதீதன். அவர் சிவசம்புவின் நண்பர் – பழம்பெரும் எழுத்தாளனுங்கூட. அதீதனின் எழுத்துக்கு வாசக உலகில் நல்ல மதிப்பு. ஆனால் முருவேலைப் பொறுத்த வரையில் அதீதன் எழுத்தாளரேயல்ல.

'பத்தாம்பசலி எழுத்தாளன். உண்மையைத் தத்ரூபமாக எடுத்துக் கூறப் பயந்தவர்' என்று இளமட்டங்களிடம் அடிக்கடி கூறுவான் முருகவேள்.

"என்ன தம்பி நடந்தது? இலக்கிய சர்ச்சையில் ஏதோ கலாட்டா ஏற்பட்டதாமே" என்று கேட்டார் அதீதன்.

"மண்டையென்ன, தொண்டையை நெரித்தாலும் கொண்ட கொள்கையைக் கண்டவரிடமெல்லாம் விண்டுபேசுவேன். உள்ளத்தெழுந்த உறுதியாம் எண்ணத்தைக் கள்ளமில்லாமல் கருத்து நயத்துடன்......"

"கொஞ்சம் பொறு தம்பி......எனக்கு வேறு வேலை இருக்கிறது. விபரத்தைச் சுருக்கமாக நேரிய தமிழில் கூறிமுடித்து விடு"

அதீதன் கூறிமுடித்ததும் முருகவேலின் இதழ்க்கடையில் ஒரு அலட்சியப் புன்னகை நெளிந்தது. "சரி, உங்களது பதிலுக்கு விளக்கந்தாருங்கள்..."

"கேள்வியைக்கொஞ்சம் தெளிவாகக் கேள். அவள் தற்கொலை செய்யவேண்டிய நிலையில் எப்படிக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டாள்?"

"பசிக் கொடுமையால் வாடுகிறாள் ஒருத்தி. அவளிடமுள்ளது கற்புமட்டுந்தான். அதை விற்றால் வயிறு நிரம்பும், இல்லையேல் மாண்டுபோக வேண்டியதுதான். எதைத் தேர்ந்தெடுப்பது சரி."

"மரணத்தை. வாழத்தெரியாதவள், வாழமுயற்சிக்காதவள் நாட்டைக் கெடுக்காமல் பேடியைப் போல் மாண்டுபோகட்டும். பசிவந்ததும் பிச்சை எடுக்க வீதியில் இறங்குவதையே அனுமதிக்க முடியாது. எவ்வித கட்டுப்பாடும் இல்லாததாலேயே இன்று வீதிகளில் சிறுவர்கள், வாலிபர்கள் வயோதிபர்களெல்லாம் சோம்பேறிகளாகப் பிச்சை ஏற்றுத்திரிகிறார்கள். பசி வந்தால் பத்து வீட்டைப் பெருக்கி வயிறு வளர்க்கலாம்......"

"பத்து வீட்டுக்குப் போகுமுன் தான் முதல் வீட்டிலேயே கற்பை விழுங்கப் பிசாசு ஒன்று வாயைப் பிளந்துகொண்டு நிற்கிறதே..."

"எல்லா ஆண்களுமே அவ்வளவு மகாமட்டமானவர்களல்ல. அப்படி எங்காவது ஒருவனிருந்தால் அவன் முகத்தில் அறைந்துவிட்டு அவள் வெளியேற வேண்டியதுதான். நீ சொல்வதைப் பார்த்தால் இன்று பீடிக்கம்பெனிகளில் வேலைசெய்யும் ஆயிரக்கணக்கான யுவதிகளைச் சந்தேகக் கண்கொண்டு பார்பாய்போலிருக்கிறது. தீப்பெட்டிக்கம்பெனிகள், பெனியன்கம்பெனிகள், நெசவுசாலைகள், சிகரெட் கம்பெனிகள் போன்ற பல குடிசைக் கைத்தொழில்களில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் ஆண்களின் நிர்வாகத்தின்கீழ் கடமையாற்றுகிறார்கள். இவர்களைப்பற்றி உனது அபிப்பிராயமென்ன?

ஆணுக்கும் சரி பெண்ணுக்கும் சரி கற்பு வெகு பவித்திரமானது. அதன் புனிதத்தன்மை கெட்டுவிடுவதால் ஒன்றும் கெட்டுவிடாது என்று வாதிப்பவர்கள் பல விஷயங்களை ஊன்றி கவனிப்பதில்லை. தாம்பத்திய வாழ்வின் முதற்படியில் கால் வைக்கும் ஒரு ஆணும் பெண்ணும் ஆரம்பத்தில் காமத்தின் அடிப்படையில் அரும்பிய அன்புணர்ச்சியிலேயே நீக்கமற நெருங்கிப்பிணைகிறார்கள். இந்த உணர்ச்சி பல காலம் நீடிக்கக்கூடியதல்ல. ஆனால் குழந்தைச் செல்வங்கள்தான் அவர்கள் பிணைப்பை நிரந்தரமாக்குகின்றன. இத்தகைய சக்திவாய்ந்த குழந்தைகள் தனக்குப் பிறந்தவை என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாத நிலையிலுள்ள ஒரு கணவனிடம் நெருங்கிய பிணைப்பை எதிர்பார்க்க முடியாது. அவனது விசித்திரக் கொள்கை அவனுக்கும் மிருகத்துக்கும்பேதமற்ற நிலையில் கொண்டு போய்விடுகிறது.

மிருகங்களும் குட்டி ஈனுகின்றன. ஆனால் அப்பா தன் குட்டிகளைப்பற்றி அறிய முயற்சிப்பதில்லை — அவசியமுமில்லை. அவசியமேற்பட்டு முயற்சித்தாலும் திட்டவட்டமாக 'இது என் பிள்ளை' என்று அதனால் கூறமுடியாது.

பகுத்தறிவின் காரணமாக மனிதனுக்கும் மிருகத்துக்கும் சில வித்தியாசங்களுண்டு. பகுத்தறிவைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டால் நாமும் மிருகங்களே.

உன்கையில் ஒரு மோதிரமிருக்கிறது. உனக்குப் பணம் தேவைப்பட்டபோதெல்லாம் அந்த மோதிரத்தின் நினைவுதான் முதலில் உன் உள்ளத்தெழும். மோதிரத்தை அடகு வைக்காவிட்டால் பணத்துக்கு வேறு வழியே இல்லையென்றுதான் நீ எண்ணுவாய். மோதிரம் உன் கையை விட்டுப் போய்விட்டபின்புங்கூட உனக்குப் பணத்தேவை ஏற்படும். அப்பொழுதெல்லாம் நீ மோதிரத்தை நினைப்பதில்லை உன்னிடமிருந்த மோதிரம் உண்மை அன்பின் நினைவுச்சின்னமானால் அதனை நீ விற்கவோ அடகு வைக்கவோ மாட்டாய். இறக்கும் போதும் அது உன் கையை விட்டகலாது.

கற்பும் அத்தகையதே. பசி வந்ததும் கற்பை விற்பதில் தவறொன்றுமில்லையென்று நீ பிரச்சாரம் செய்து அதில் வெற்றியுங் கண்டுவிட்டால் வயிறு வாடியதும் கற்பு விற்பனைப் பொருளாகி உடனடியாக ஒரு பெண்ணின் கண் முன்னால் வந்து நிற்கும். வயிற்றுப்பசியைப்போக்க வேறு வழிகளைத் தேட அவள் சிரமமெடுத்துக்கொள்ளமாட்டாள்.

இளமை மாறி, கற்பு விலையற்றபொருளாகி விட்டபின் அவள் இறந்து விடுகிறாளா? அதுதானில்லை. அவள் எப்படியோ வாழ முயற்சிக்கிறாள்.

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் சுமார் பத்துப் பன்னிரண்டு வருடங்களே அவள் மானத்தை விலைகூறமுடியும். அதன்பின் அதை வாங்க ஒருவருமே இருக்கமாட்டார்கள். வறுமை எல்லோருக்கும் தான் ஏற்படுகிறது. சிறுவர்களுக்கு வறுமை வந்துவிட்டால் விற்பதற்கு அவர்களிடமொன்றுமில்லை. பொதுவாக ஆண்கள் மானத்தை விலைபேசமுடியாது. வாலிபப் பருவத்தைத் தாண்டிவிட்டபெண்களையும் வறுமை விட்டுவைக்காது. அவர்கள் எதை விலைபேசுவார்கள்?

(11-ம் பக்கம் பார்க்க)

அடலப் ஈச்மன் கதை.

# யார் இந்த ரிக்காடோ கிளமென்ட்?

ஜோ. ஏ. எம். தாஸ்

இஸ்ரேல் துப்பறியும் நிபுணர்களுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு, எங்கோ தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருந்தான் அடலப் ஈச்மன்!

ஜெர்மனி, எஹிப்து, ஸ்பெபெயின், சிரியா, துருக்கி முதலிய இதர நாடுகளில் ஈச்மனை 'வலைபோட்டு'த் தேடிக் கொண்டிருந்த இஸ்ரேல் துப்பறியும் நிபுணர்கள் ஏமாந்ததுதான் மிச்சம்! இருந்தாலும், அவர்கள் முயற்சியைக் கைவிட்டு விடவில்லை. என்ருவது ஒருநாள் தங்கள் முயற்சி திருவினையாகும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. அதற்கு ஏற்றுற்போல், ஈச்மன் ஒளிந்திருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கக் கூடிய இடங்களைப் பற்றிய தகவல்களைப் பொதுமக்களில் பலர் அவ்வப்போது அவர்களுக்கு அறிவித்து வந்தார்கள். இதுவும் இஸ்ரேல் துப்பறியும் நிபுணர்களுக்கு உற்சாகத்தை மூட்டியது.

*1958*-ம் ஆண்டு, மேற்குஜெர்மானிய அரசாங்கம் ஒருபுதிய காரியாலயத்தை நிறுவியது. ஹிட்லரின் நாஜி யுத்தக் குற்றவாளிகளைப் பிடித்து, அவர்களுக்குத் தகுந்த தண்டனையளிக்க வேண்டியதே அந்த புதிய இலாகாவின் வேலை. யுத்தக் குற்றவாளிகளைப் பிடித்துத் தண்டிப்பதற்கான முயற்சிபற்றிய விஷயங்களை அடுத்தவர்களுடன் கலந்துபேசவும் அந்த இலாகா விருப்பம் தெரிவித்து ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையை இஸ்ரேல்துப்பறியும் நிபுணர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டார்கள்.

*1959*-ம் ஆண்டு, இஸ்ரேல் துப்பறியும் நிபுணர்கள் கோஷ்டி ஒன்று மேற்கு ஜெர்மனிக்குச் சென்றது. மேற்கு ஜெர்மனியை அடைந்த அவர்களுக்கு, 'ஈச்மன் புவனர்ஸ் அயர்ஸ் என்ற இடத்தில் வசிக்கிருன்' என்றசெய்தி கிடைத்தது. துப்பறியும் நிபுணர்களின் மனதிலும் தெம்பு பிறந்துவிட்டது.

இஸ்ரேல் துப்பறியும் நிபுணர்களுள் ஹங்கேரியைச் சேர்ந்த ஒருவரும் இருந்தார். " என் உயிர் போனாலும் பரவாயில்லை, அதுவரையில் அயராது முயற்சி செய்து எப்படியாவது அந்த அடலப் ஈச்மனைப் பழிவாங்கியே திருவேன்! " என்று சபதம் செய்திருந்தார் அவர். அவர் அப்படிச் சபதம் செய்ததற்குக் காரணம் இல்லாமலும் இல்லை!

அன்ருெருநாள்—

ஹங்கேரியில் ஈச்மனின் இராதகச் செயல்களுக்கு உள்ளாகி நாலுலட்சத்து ஐம்பதினாயிரமபேர் தங்கள் உயிரைப் பலிகொடுத்தார்கள். அவர்களுள் அந்த ஹங்கேரிய துப்பறியும் நிபுணரின் தாய் தந்தையர், சகோதரர்கள், சகோதரிகள், உற்ருர் சுற்றத்தார், நண்பர்கள் அத்தனை பேரும் தங்கள் உயிர்களைக் காலனுக்கு. காணிக்கையாகக் கொடுத்து விட்டார்கள்!

கடைசியில்—

கொலைகாரன் ஈச்மனின் பிடியில் சிக்காமல் தப்பியவர், அந்தத் துப்பறியும் நிபுணர் மாத்திரம்தான்! அப்படியிருக்கும் பொழுது, தன் குடும்பத்தினர் அத்தனை பேரையும் கூண்டோடு கைலாசத்திற்கு அனுப்பிய அந்தக் கொடியவனைப் பிடித்துப் பழிதீர்த்துக் கொள்ளவேண்டும் என்று அவர் சபதம் செய்ததில் தவறு ஒன்றுமில்லையல்லவா? பல ஆண்டு காலமாக ஈச்மனைக் கண்டு பிடிப்பதையே தமது லட்சியமாகக் கொண்டு முயற்சித்து வந்தார் அந்த ஹங்கேரியத் துப்பறியும் நிபுணர்.

மாதங்கள் பல ஒன்றன்பின் ஒருக உருண்டோடின. *1960*-ம் ஆண்டு ஜனவரி மாதமும் வந்தது!

ஒருதினம்—

அர்ஜண்டைனுவிலுள்ள ஒரு ஹோட்டலில் 'ஈவினிங் பார்ட்டி' ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. பல முக்கிய பிரபலஸ்தர்களுடன், தொழிலாளர்களும் அந்தப் 'பார்ட்டி'யில் கலந்து கொண்டிருந்தார்கள். உல்லாசப் பிரயாணிகளாகவும், வர்த்தகர்களாகவும் பல இஸ்ரேல் துப்பறியும் நிபுணர்களும் கூட அந்தப் 'பார்ட்டியில்' கலந்து கொண்டிருந்தார்கள். ஆனுல், அது பலருக்குத் தெரியாது! கூட்டத்தில் பல தொழிலாளர்கள் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

" மனித வாழ்க்கையே இப்படித்தானப்பா! ஒருகாலத்தில் மன்னாதி மன்னர்களாக இருந்தவர்கள் எல்லாம், இன்று மண்ணைக் கௌவிக் கொண்டிருக்கிருர்கள்! உதாரணத்திற்கு ஈச்மனைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன். பாவம், ஒரு காலத்தில் ஹிட்லரின் ஆட்சியில் எத்தனை அதிகாரம் செலுத்தினுன்? இன்று. மோட்டார் கார்களுக்கான உறுப்புகளைச் செய்கிருன்...இதுதான் மனிதனின் வாழ்க்கை!..." என்று, உரையாடலின் ஊடே ஒரு தொழிலாளி பிரலாபித்தான்

அந்த வசனம், இஸ்ரேல் துப்பறியும் நிபுணர்களுள் ஒருவரின் 'ஊசிச் செவி'களுக்குள் எப்படியோ புகுந்துவிட்டது!

அடுத்து—

உடனடியாக புவனர்ஸ் அயர்ஸ் நகரத்தில் எத்தனை மோட்டார் தொழிற்சாலைகள் உண்டோ, அத்தனை மோட்டார் தொழிற்சாலைகளையும் துப்பறியும் நிபுணர்கள் முற்றுகையிட்டார்கள், அத்தனை நிபுணர்கள் முயன்றும், அவர்களையெல்லாம் ஏமாற்றிக் கொண்டு இந்த உலகத்திலேயே உயிருடன்தான் சாதுர்யமாக வாழ்ந்துகொண்டிருந்தான் அடலப் ஈச்மன்!

ஒருநாள்—

புவனர்ஸ் அயர்ஸ் நகரத்திலுள்ள 'மெர்ஸிடி—பென்ஸ்' (Mercedes—Benz) என்ற மோட்டார் கார் தொழிற்சாலையிலிருந்து வேலை முடிந்து தொழிலாளர்கள் 'புற்றீசல்'போல் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கிடையில் வந்துகொண்டிருந்த அகன்ற பெரிய காதுகளையுடைய ஒருவன், துப்பறியும் நிபுணர் ஒருவரின் கவனத்தைக் கவர்ந்தான் பார்வைக்கு அந்தஆசாமி அடலப் ஈச்மனைப்போல் இருந்ததுதான் காரணம்

ஒன்றையுமே சட்டைசெய்யாதவனுக வந்துகொண்டிருந்த அகன்ற காதுக்காரன், அருகில் இருந்த பஸ் ஒன்றில் ஏறி, நகரத்திற்கு மிக அப்பாலுள்ள ஒரு ஒதுக்குப் புறமான இடத்திற்கு வந்து இறங்கினுன். அந்தத் துப்பறியும் நிபுணரும் அந்தப் பஸ்ஸைப் பின் தொடர்ந்து சென்று நோட்டம் விட்டார். மறுதினமும் அதேபோல் அந்த நிபுணர் வேவு பார்த்தார். அந்த ஆசாமியின்மேல் துப்பறியும் நிபுணருக்குச் சந்தேகம் வலுத்தது. இஸ்ரேல் தலைமைக் காரியாலயத்திற்கு கம்பியில்லாத் தந்தியின் மூலமாக இந்த விஷயம அறிவிக்கப் பட்டது. அதைத்தொடர்ந்து மேலும் இருபது துப்பறியும் நிபுணர்களும், உயர்தர அதிகாரிகளும் புவனர்ஸ் அயர்ஸ் நகருக்கு வந்து இறங்கினுர்கள்.

இருந்தாலும், அந்த ஆசாமிதான் அடலப் ஈச்மன் என்று திட்ட வட்டமாக அறிந்து கொள்ள முடியவில்லை! ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் அந்த அகன்ற காதுக்கார ஆசாமி வசித்துவந்த வீட்டைச் சுற்றியுள்ள பலரைத் துப்பறியும் நிபுணர்கள் இரகசியமாக விசாரித்தார்கள்.

ஆனுல்—

(9-ம் பக்கம் பார்க்க)

## வேறு கிரகங்களுடன் தொடர்பு கொள்வதுபற்றி ரகசிய ஆலோசனை!

### அங்கு உயிரினங்கள் இருக்கக்கூடும் என விஞ்ஞானிகள் கருத்து.

வேறு கிரகங்களுடன் தொடர்பு கொள்ளும் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக பிரபல அமெரிக்க விஞ்ஞானிகள் கடந்த நவம்பர் மாதம் கிரீன் பாங்கிலுள்ள தேசிய ரேடியோ வானியல் ஆராய்ச்சி நிலையத்தில் ரகசியமாகச் சந்தித்ததாக 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை செய்தி தெரிவிக்கிறது.

பரபரப்பைத் தவிர்த்து, விஷயத்தை அமைதியாக விஞ்ஞான ரீதியில் ஆராய்வதற்காக அக்கூடம் ரகசியமாக வைக்கப் பட்டதாக அப்பத்திரிகை கூறியது.

வானியல், தகவல் போக்குவரத்து. பிராணிகள் நடத்தை, அணுசக்தி, பௌதீகம் ஆகிய துறைகளைச் சேர்ந்த பிரபலஸ்தர்கள் அதில் கலந்து கொண்டார்கள். சமீபத்தில் ரஸாயனத்துக்காக நோபல் பரிசு பெற்ற கலிபோர்னியா சர்வகலாசாலைப் பேராசிரியர் டாக்டர் மெல்வின் கால்வினும் கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தார்.

சூரியமண்டலத்துக்கு அப்பாலிருந்து பூமிக்கு பல தகவல்கள் வரும் சாத்தயக்கூறு இருப்பதாக பல விஞ்ஞானிகள் கருதுகிருர்கள்

தற்போதைய நெருக்கடியிலிருந்து பூலோகம் மீண்டால் தொலைதூர நாகரிகங்களுடன் தொடர்பு கொள்ள முயற்சிப்பதில் மனிதமுயற்சியின் பெரும்பகுதி செலவிடப்படலாம் என்று கார்னெல் சர்வகலாசாலையின் பௌதிகப் பேராசிரியர் டாக்ளர் பிலிப் மாரிஸன் கூறினுர்.

ஆனுல் மற்ற கிரக மண்டலங்களுக்கு பிரயாணம் செய்வது இந்த அல்லது வேறு எந்த மனித வர்க்கத்துக்கும் சாத்தியமல்ல என்று ஹார்வர்டு சர்வகலாசாலைப் பேராசிரியர் டாக்டர் எட்வர்டு எம். பர்ஸெல் கருதுகிருர்.

வேறு உலக தகவல்களை சேட்டறியும முயற்சி செய்யப்படுவதற்கு முன்பு இரு முக்கிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்று மகாநாட்டில் கலந்துகொண்ட சில விஞ்ஞானிகள் கருதுகிருர்கள்.

அவையாவன: (1) சூரியமண்டலத்தில் வேறு இடங்களிலும் உயிரினங்கள் இருப்பதாக நிரூபிப்பது (2) அருகிலுள்ள நட்சத்திரங்களைச் சுற்றி கிரகங்கள் வட்டமிடுவதாகக் காட்டுவது.

தற்போதுள்ள தொழில் நுட்ப அறிவைக் கொண்டு இவற்றைச் சாதிக்க முடியும் என்று நம்பப்படுகிறது. வேறு கிரகங்களில், உயிரினங்கள் இருக்கக் கூடும என்று விண் கற்களை ஆராய்ந்து டாக்டர் கால்வினும் அவருடைய சகாக்களும் கருதுகின்றனர்.

உங்களுக்குச் சேவை செய்ய வருகிறது!
நவீன தயாரிப்பாக
'மில்க்வைற் சோப்'
புதிய கவர்ச்சிகரமான மேலுறையுடன்



# சிரித்துப் பாருங்கள்!

தயாரிப்பு : 'மாலா'

இன்பெர்டர்: — ஏன் ட்ரைவரை இருத்திக் காரை தள்ளிக்கொண்டு வருகிருய்?


கான்ஸ்டபிள்: — லைசென்ஸ் இல்லாமல் கார் ஓட்டியதாக அவனைச் 'சார்ஜ்' செய்திருக்கிறேன். எனக்கும் கார் ஓட்டத்தெரியாது சேர்!

● ● ●

ஒருவர்: — (ஆத்திரத்தோடு) உன்னை நாய் கூடச் சீண்டாது ……

மற்றவர்: — மரியாதையாகச் சொல்கிறேன், சொன்னதை வாபஸ் பெறு. இல்லையேல் ………

ஒருவர்: — சரி அப்பா, உன்னை இனி நாய் சீண்டும்.





ஒருவர்: — (நண்பரிடம்) நான் ஒரு புது மொடல் கார் வாங்கியிருக்கிறேன் ………

நண்பர்: — கொண்டுவந்து போடப்பா பார்க்கலாம்………




பையனின் ரத்தம் சோதிக்கவே வேண்டுமென்று சொன்னீர்களே டாக்டர், அதுதான் அவன் படுக்கையிலிருந்த இரண்டு முட்டைப் பூச்சிகளைப் பிடித்துக்கொண்டு வந்துவிட்டேன்.



காதலி: — நேற்று சபாவில் பாடினேன் பாருங்கள் ……… எல்லோரும் 'குயில் தோற்றுவிட்டது' என்று என்னைப் புகழ்ந்து பேசினர்கள் ………

காதலன்: — அவர்கள் வேறு சொல்லவேண்டுமா? தத்ரூபம் நீ குயிலேதானே ………



குமஸ்தா: — மூன்று பேர்களுடைய வேலையையும் நானே தனியச் செய்கிறேன் சேர்………

மனேஜர் — அப்படியானல் மற்ற இருவருக்கும் நோட்டீஸ் கொடுத்து விடுகிறேன்;

தேர்தலில் நிற்பவர்: — (மேடைப் பிரசங்கத்தில்) மகா ஜனங்களே! மீண்டும் நீங்கள் என்னைத் தெரிவுசெய்துபாராளுமன்றத்துக்கு அனுப்பினீர்களானல் மக்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பேன். மேலும்………

கிழவர்: — (கூட்டத்தின் முன் வரிசையில் இருந்து) அடபாவி மனுஷா! போன முறை உன்னைத் தெரிவு செய்து அனுப்பினதற்குப் பிறகு இரண்டு பெண்களைக் கட்டிக் கொடுத்தாய். மூன்று பையன்களுக்கு வீடும், காரும் வாங்கிக் கொடுத்தாய். இதெல்லாம் போதாதென்று இந்த முறையும் தேர்தலில் வெற்றி பெற்று உன் மக்களுக்கு வசதி செய்யப் போகிருயா!?

( 8-ம் பக்கத் தொடர்ச்சி )

அங்கேயும் அவர்களுக்குத் தோல்விதான் கிட்டியது. ஈச்மன் என்று அவர்கள் நம்பிய அந்த ஆசாமியின் பெயர் ரிக்காடோ கிளமென்ட் என்று அண்டை அயலவர்கள் கூறினர்கள். துப்பறியும் நிபுணர்களின் முகங்களில் ஏமாற்றம் பிரதிபலித்தது! அதே நேரத்தில், அவர்களில் ஒருவரின் மூளை பலமாக வேலை செய்தது!

ஹிட்லரின் ஆட்சியில் ஈச்மன் சுகபோக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த காலத்தில், அவனுடைய மனைவியான திருமதி பிராவ் ஈச்மன் ஆஸ்திரேலியாவில் வசித்துக் கொண்டிருந்தாள் அவளுடைய புகைப்படத்தை வைத்துக்கொண்டு முயற்சி செய்து பார்க்கலாம் என்று அந்த நிபுணர் யோசனை கூறினர். அதன்படியே ஈச்மனின் மனைவியின் படத்தை, ரிக்காடோ கிளமென்ட்டின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் காட்டி விசாரித்தார்கள் 'அது திருமதி ரிக்காடோ கிளமென்ட்டின் படம்தான் அதில் கொஞ்சமும் சந்தேகமே இல்லை' என்று அந்த ஜனங்கள் கூறினர்கள்!

ஈச்மனின் குட்டு வெளிப்பட்டது! அவன் தான் 'ரிக்காடோ கிளமென்ட்' என்ற புனைபெயருக்குள் பதுங்கிக் கொண்டு வாழ்ந்து வருகிருன் என்று இஸ்ரேல் துப்பறியும் நிபுணர்கள் திடமாக நம்பினர்கள் அந்தச் சந்தேக நபரின் அகன்ற பெரிய காதுகளும்; 'அவன் அடல்ப் ஈச்மன் தான்' என்று எடுத்தியம்பின!

ஈச்மனைக் கண்ணால் கண்ட செய்தி இஸ்ரேல் தலைமைக் காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டது அந்தச் செய்தி இஸ்ரேல் அரசாங்க உயர்தர வட்டாரங்களில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது! அதைத் தொடர்ந்து உயர்தர அதிகாரிகளுக்கிடையில் வாக்கு வாதங்களும் வளர்ந்தன.

"ஈச்மனை உடனடியாகக் கொன்றுவிட வேண்டும். அவனை இனிமேலும் விட்டுவைக்கக் கூடாது!" என்று ஒரு சாரார் ஆத்திரப்பட்டார்கள்.

"அவன் எத்தனை கொடுமை செய்தவனுக இருந்தாலும். அவன் ஒரு மனிதன் என்ற காரணத்தால், அவனை விசாரணை செய்து குற்றவாளிஎன்று கருதுவதற்கு முன் கொன்று விடுவது மட்டமான செயல், எனவே அவனை இஸ்ரேல் நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து விசாரணை செய்து அதன் தீர்ப்பின்படி தண்டனை கொடுப்பதுதான் முறை" என்று மற்ருெரு சாரார் விவாதித்தார்கள். கடைசியில் ஈச்மனை இஸ்ரேலுக்குக் கொண்டு வருவது என்றே முடிவு செய்யப்பட்டது!

ஆனல்—

அதிலும் ஒரு பெரும் சிக்கல் இருக்கத்தான் செய்தது! அடுத்தநாட்டில் அவனைக்கைதுசெய்வதற்கு சட்டம் இடம் கொடுக்காது! அத்தோடு, அர்ஜன்டைனு அரசாங்கமும் இஸ்ரேல் அரசாங்கமும் இது விஷயத்தில் எதுவித ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை எனவே, அந்த நாட்டில் யாரையும் குற்றவாளிகள் என்று கைது செய்து இஸ்ரேலுக்குக் கொண்டு செல்ல முடியாது! அப்படியானல் வேறு வழி?

சட்டத்தின் கண்களில் இஸ்ரேல் துப்பறியும் நிபுணர்கள் மண்ணைத் தூவ முனைந்தனர்! ஈச்மனைக் கள்ளத்தனமாகக் கைது செய்து, இஸ்ரேலுக்குக் கடத்திக் கொண்டு போய்விடவேண்டும் எனத் தீர்மானித்தார்கள்.

ஆனல்—

அதை மிகச் சாதுரியமாகச் செய்துமுடிக்க வேண்டுமே? 'பூனைக்கு மணி கட்டுவது யார்?' என்ற பிரச்சினை துப்பறியும் நிபுணர்களின் மத்தியில் முளைத்தது!

(தொடரும்)

## உங்கள் காலபலன்

### இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

**4-3-62 முதல் 10-3 62 ரை**

**மேடம்:** கருமங்களில் இந்த வாரம் இலகுவாக வெற்றி காணமுடியும். பழையமுதலீடுகளால் லாபமுண்டு எதிர்பாராத விதத்தில் முன்னேற்றங்களுண்டு. நண்பர்களாலும் உறவினர்களாலும் உதவிகள் கிட்டும்.

**இடபம்:** தொழிலில் மட்டான முன்னேற்றம் காணப்படும், ஆனல் பிரயாசம் அதிகமாக இருக்கும். பொருள் லாபமும் அதிகமிருக்காது. பிதாவழி பந்துக்களால் கஷ்டமுண்டு.

**மிதுனம்:** தொழிலில் முன்னேற்றமுண்டு பொருள் விருத்தியும் காணப்படுகிறது. ஆனல் அமைதி நிலவாது நண்பர்களாலும் தூரத்து உறவினராலும் உதவிகள் கிட்டும் வாரத்தின் முதல் நாளை கவனமாகக் கழிக்கவும்.

**கடகம்** குடும்பச் சச்சரவுகள் தொடர்ந்து இருக்கும். தாரகக்குறைவுண்டு, தொழில் ஸ்தானத்தில் சங்கடங்கள் காணப்படுகின்றன திங்கள் செவ்வாய் வாரங்களை அவதானமாக கழிக்கவும்,

**சிங்கம்:** தொழில் முன்னேற்றமுண்டு. ஆனல் மனதில் அமைதி நிலவாது குடும்பச்சச்சரவுகள் ஏற்படலாம். புதன், வியாழன் தினங்களை அவதானமாகக் கழிக்கவும்.

**கன்னி:** எதிர்ப்புகளையும் தடைகளையும் சமாளித்து முன்னேற முடியும். கருமங்களில் அதிக பிரயாசத்தின் பின்பே வெற்றிகிட்டும். வாரத்தின் கடைசிநாளை அவதானமாகக் கழிக்கவும்

**துலாம்:** உறவினருடன் சிறு சச்சரவுகள் உண்டாகும். மாதாவுக்கும் சுகவீனம் காணப்படுகிறது. ஆனல் தொழிலில் பல முன்னேற்றமுண்டு. வார இறுதியில் சுகவீனம் காணப்படுகிறது வயிற்றுக்கோளாறுகள் உண்டாகலாம்.

**விருச்சிகம்:** விவசாயத் தொழிலில் முன்னேற்றமுண்டு, அன்னியர் மூலமாகப் பலவித உதவியுண்டு. சிலநன்மையான மாற்றங்களுக்கிடமுண்டு

**தநுசு:** இளைய சகோதரரால் நன்மையுண்டு. பூமியாலும் லாபம்கிட்டும், ஆனல் மனதில் பலவித ஆலோசனை. மறதி உண்டு. பிறரை அதிகம் நம்ப வேண்டாம்,

**மகரம்:** கருமங்களில் தீர்மானமான முடிவுகொண்டுமுன்னேறுவது கஷ்டமாக இருக்கும். குடும்பச்சச்சரவுகளும் காணப்படுகின்றன. ஆனல் பொருள் விருத்தியுண்டு.

**கும்பம்:** மனச்சஞ்சலம் ஏற்படும் தேகசுகமும் சிறிது பாதிக்கப்படும். உஷ்ண சம்பந்தமானரோகங்கள், பித்தநோய் உண்டு. நண்பர்களின் சகாயமுண்டு.

**மீனம்:** நேத்திர பீடை உண்டாகும். பொதுவாகத் தேகசுகம் பாதிக்கப்படும் ஆனல் தொழிலில் தொடர்ந்து முன்னேற்றமுண்டு. அன்னியரின் சகாயமுண்டு.

மோட்டார் வாகன சொந்தக்காரர்களே!

**வேல் பற்றறி சேல்ஸ் அன் சேவிஸ்**

ஸ்தாபனத்தார் உங்களுக்குச் சிறந்த சேவையை அளிக்க,
சகல பற்றறி வேலைகளிலும்
விசேஷ பயிற்சிபெற்ற நிபுணர் ஒருவரை கொழும்பிலிருந்து
நியமனம் செய்திருக்கிருர்கள்.

உங்களுடைய மோட்டார் வாகன பற்றறி
பழையதாய் இருந்தாலும்
குறைந்த செலவில் அதற்குப்
புத்துயிரளிக்கும் அற்புத சேவையை நல்கும்
நல்லதொரு நிலையம்.

**மோட்டார வாகனங்களுக்கும்
ஒலிபெருக்கிகளுக்கும்**
குறைந்த வாடைக்குப் பற்றறி கொடுக்கப்படும்
அத்துடன் புத்தம் புதிய பற்றறிகளும்
சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**வேல் பற்றறி சேல்ஸ் அன் சேவிஸ்**
276, கே. கே. எஸ். ரேட்,
(சிவன் கோவிலுக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

## நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு காந்தியடிகள் அஞ்சலி!

*1934-ம் ஆண்டில், நபிகள் நாயகத்தின் பிறந்ததின விழா புனவில் நடைபெற்ற போது, காந்தியடிகள் ஹிந்தியில் நிகழ்த்திய சொற்பொழிவை, ஜனப் எம். எஸ். பலீல் அவர்கள் தொகுத்துத் தந்துள்ளார். புனித ரம்ழான் தினத்தை முன்னிட்டு 'புதினம்' இதைப் பிரசுரிக்கிறது!*

முஸ்லிம்களுடன் நான் கொண்டுள்ள நட்பு இன்று நேற்றுத் தோன்றியதல்ல 50 ஆண்டுகளுக்கு முன் நான் ஒரு இளைஞனக இருந்த காலமுதலே எனக்கு முஸ்லிம்களுடன் நட்புரிமை இருந்துவந்துள்ளது! நான் தென் ஆபிரிக்காவுக்கு முதன் முதலில் விஜயம் செய்ததுகூட, அந்தநாட்டிலுள்ள ஒரு முஸ்லிம் கம்பெயின் விவகாரம் பற்றித்தான். அங்கே பலவருடகாலம் முஸ்லிம்களுடன் நெருங்கிப் பழகும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்தியாவில் கூட அலீ சகோதரககளுக்கும் எனக்கும் இடையே எத்தனை நெருங்கிய உறவு இருந்தது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். மௌலான ஷௌகத் அலீயும் நானும் இப்பொழுது விலகியிருப்பது போல் காணப்பட்டாலும், அவர் தன்னுடைய சட்டைப்பையிலேயே என்னை எப்பொழுதும் வைத்திருக்கிருர் என்பது அவருக்குத் தெரியும்!

முஸ்லிம்களுடன் எனக்கு இத்தகைய உறவு இருப்பதால், நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தறிவது என்கடமை என்பதை உணர்ந்தேன். தென் ஆபிரிக்காவில் நான் இருந்த காலத்தில் அதனைப் படிக்க முயன்றேன் ஆனல் அப்பொழுது எனக்கு உருதுமொழி நன்ருகத் தெரியாது. இந்தியாவில் நான் சிறைவாசம் செய்ய நேர்ந்தது எனக்கு ஒரு நல்ல அதிர்ஷ்டமாகிவிட்டது! நான் சிறையில் இருந்த பொழுது, மௌலான ஷிப்லீ அவர்கள் எழுதிய நபிகள் நாயகத்தின் சரித்திரத்தை ஹக்கீம் சாஹிப் ஆஜ்மல்கான் அவர்கள், எனது வேண்டுகோளுக்கிணங்க அன்புடன் அனுப்பி வைத்திருந்தார். அதே சமயத்தில் நபிகள் காயகத்தின் தோழர்களைப் பற்றிய நூல்களையும் படித்து முடித்தேன் இஸ்லாத்தைப் பற்றியும், நபிகள் நாயகத்தைப் பற்றியும் ஆங்கிலத்தில் இருக்கும் பல நூல்களைப் படித்தேன் இவைகளைப் படித்ததின் பயனக 'வேதங்களும், கீதையும் மாத்திரமன்றி, திரு—குர்ஆனும், பைபிளும் கூட எனது புனித நூல்களே' என்ற முடிவுக்கு வந்தேன். ஹஜ்ரத் முஹம்மது ஒரு மாபெரும் நபியாக விளங்கினர். நான் படித்தவைகளிலிருந்து நபிகள் நாயகம் ஒரு மெஞ்ஞானி என்பதை உணர்ந்தேன். அவர் ஆண்டவனுக்கு மிகவும் அஞ்சி நடந்தார். நான் உங்களுக்குப் புதிதாக ஒன்றையும் சொல்லிவிடவில்லை என்பது எனக்குத் தெரியும். அவரது வரலாற்றைப் படித்ததிலிருந்து எனக்கு என்ன தோன்றியது என்பதையே கூறுகிறேன். எல்லையற்ற துன்பங்களையும், கொடுமைகளையும் அவர் அனுபவித்தார்; அஞ்சாத நெஞ்சு படைத்திருந்தார். ஆண்டவனையன்றி மனிதன் எவனுக்கும் அவர் அஞ்சவில்லை எது சரியான காரியமென்று அவர் நினைத்தாரோ, அதனை உறுதியுடன் செய்தார். அதன் முடிவு என்னவாயினும் சரி என்று தொடர்ந்து செயலாற்றினர். ஒன்று சொல்வதும், அதற்கு மாருக மற்ருென்று செய்வதும் அவர் வாழ்நாளில் அறவே கிடையாது! தாம் நினைத்ததையே எப்பொழுதும் செய்தார். அவரது கருத்தில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டால் அடுத்த நாளே அதனைத் திருத்திக் கொள்ளத் துணிந்து விடுவார். தமது கருத்தை மாற்றிக் கொள்ளும் போது, ஏற்படக்கூடிய எத்தகைய கஷ்டங்களையும், எவ்வளவு பெரிய எதிர்ப்புக்களையும் அவர் லட்சியம் செய்யவில்லை!

நபிகள் நாயகம் ஒரு 'பக்கீ'ராகவே இருந்தார். உலகத்தின் செல்வங்களையெல்லாம் துறந்து விட்டார் அவர் விரும்பியிருந்தால், பெரும் செல்வந்தராக இருந்திருக்கலாம். அவரும், அவரது குடும்பமும் தாங்களாகவே விரும்பி அனுபவித்த இன்னல்களையும் இடையூறுகளையும், துன்பங்களையும், துயரங்களையும் பற்றி நான் படித்தபோது, உங்களைப்போலவே நானும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தேன் இடைவிடாமல் ஆண்டவன் எண்ணத்தில் ஆழ்ந்திருந்து, அவன்மீது அச்சத்துடனே நடந்து, மனித சமுதாயத்தின் மீது எல்லையற்ற கருணைகாட்டிய ஒருவர்மீது என்னைப் போன்ற ஆத்மீக விசாரணையில் ஈடுபட்ட ஒருவன் எத்தனை அன்பும் மரியாதையும் செலுத்த முடியும்!

நீங்கள் யாவரும் திரு குர்—ஆன் ஓதுகிறீர்கள். ஆனலும், உங்களில் எத்தனைபேர் அதனை நடைமுறையில் பின்பற்றுகிறீர்கள்? அதே நேரத்தில் நீங்கள் என்னைத் திருப்பி ஒருகேள்வி கேட்கக் கூடும் "திரு குர்—ஆனில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல் நாங்கள் நடக்கவில்லையென்ருல், கீதையில் சொல்லியிருப்பதன்படி இந்துக்களும் ஒழுகவில்லையே!'' என்று நீங்கள் கட்டாயம் கேட்பீர்கள் அதுவும் சரிதான்!

இதிலிருந்து ஒருமுடிவுக்கு வருகிறேம் இரண்டு சமூகத்தினரும் தங்கள் மத போதனைகளைப் பின்பற்றி நடந்தால் வகுப்புச் சண்டை என்பது ஒரு பழங்காலச் செய்தியாகி விடும்! ●

### சோதிடம்

உங்கள் பெயர், பிறந்தஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ. 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினல் உங்கள் ஒரு வருடகாலபலன் மிகச் சரியாக எழுதிஅனுப்பப்படும் இந்த விளம்பரத் துண்டைவைத்துஅனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூ. 3-00 அனுப்பினல் போதுமானது.

'ரவி' சோதிடர்.
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

'தெருக்குறள்' தொகுப்பு — 'அருளாளன்'

### அநாகரிகப் பெண்!

பெண்ணெனிற் பேயுமிரங்கும்; இரங்காதின்று
பெண்ணெலாம் பேயுருவானதால்.

அங்கந்தெரிய ஆடை யணிகின்ற
மங்கையர்க்கு உண்டோமதிப்பு.

பொய்க்கூந்தல்சேர்த்துப் 'போனிடெயில்' மூடிப்பானை
மைக்குழலாள் என்பர்;மடையர்.

புட்டிப்பாலூட்டிப் பிள்ளை வளர்ப்பதே
பட்டினத்துக் காரியின்பண்பு.

உரலறியாள்; அம்மி உலக்கைபிடித்தறியாள்
'பிரஷ்'பிடிப்பாள்; பல்துலக்கவேண்டின்.

'வழவழா'வென்பாள்; வலுச்சண்டைக்கஞ்சாதாள்;
கொழுநன் உயிர்குடிக்குங் கூற்று.

பட்டினியும்பாரான் படமெனில் முன்னிற்பானை(த்)
தொட்டவனே நாட்டின் துறவி.

அச்சம், மடம் நாண் பயிர்ப்பெனுமிந்நான்கும்,
அற்ருள்; அநாகரிகப் பெண்.

# சுவையான செய்திகள்!

## டாக்டருக்குச் சிகிச்சை செய்ய டாக்டரில்லை

அக்கரைப் பற்றுப் பொலீஸாரின் துப்பாக்கிப்பிரயோகத்தில் மாண்டவர்களது பிரேதத்தைப் பரிசோதனை செய்த டாக்டர் ஏ. ரி. நல்லையா மயக்கமடைந்தார். அவருக்கு முதற் சிகிச்சை செய்ய வெறுயாருமில்லாததால் அச்சமயம் அங்கு பிரசன்னமாயிருந்த கல்முனை எம். பியும் நிந்தாவூர் எம். பியும் டாக்டரை அவரது இல்லத்துக்குத் தூக்கிச் சென்றனர். சுமார் பதினைந்து நிமிடங்களுக்குப் பின்தான் ஒரு பெண் வைத்திய அதிகாரி இவருக்குச் சிகிச்சையளிக்க முன்வந்தார். டாக்டரின் நிலையே இப்படியென்ருல் சாதாரண நோயாளிகளின் நிலை?

## தேர்தல் விநோதம்!

இந்தியாவில் பொதுத்தேர்தல் அமளி துமளிப்பட்டு ஒருவிதமாக ஓய்ந்திருக்கும் இந்நேரத்தில் தேர்தல் பற்றிய சில சுவையான சம்பவங்களை தருகிறோம்.

ஒரு சுருட்டுக் கடையில் விளம்பரத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மரத்திலுல் ஆன ஒரு மனிதப் பொம்மை 1883-ம் ஆண்டு நியூ ஜெர்ஸியில் நியாயாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது. அந்த மரப் பொம்மைக்கு, 'ஆப்னர் ரொபின்ஸ்' என்ற பெயரைச் சூட்டி வாக்குச்சீட்டில் குறித்தனர். எதிர்த்துப் போட்டியிட்ட ஸாம் டேவிஸ் என்ற மனிதரைவிட இதுஏழு வோட்டுக்கள் அதிகம் பெற்று விட்டது!

இதைவிட விசித்திரமான நிகழ்ச்சி ஒன்றும் அமெரிக்காவில் நடைபெற்றிருக்கிறது. ஒரு குதிரைக் குட்டி 51 வோட் அதிகப் படியாகப் பெற்று வெற்றியீட்டியிருக்கிறது!

வாக்காளர்கள் வோட் செய்யும் பொழுது மிகவும் கவனக்குறைவாகவும், அலட்சியமாகவும் நடந்துகொள்கிருர்கள் என்பதை வாஷிங்டன் நகர மேயர் நிரூபிக்க விரும்பினுர். எனவே 1938-ம் ஆண்டு குடியரசுக் கட்சியின் கமிட்டி அங்கத்தினர் தேர்தலுக்கு அபேட்சகராக ஒரு குதிரைக் குட்டியை அவர் நிறுத்தினுர் அபேட்சகர்கள் விண்ணப்பப் பத்திரத்தில் தன் குளம்படியைப் பதித்து அந்தக் குதிரை 'கையெழுத்து' இட்டது! சாட்சியாக வாஷிங்டன் நகர மேயர் கையொப்பமிடார். கடைசியில் குதிரைதான் வெற்றி பெற்றது!

மற்றொரு சம்பவம் 1784-ம் ஆண்டு நடைபெற்றது. பிரிட்டனில் நடந்த தேர்தலில் ஜேம்ஸ் என்பவன் போட்டியிட்டான், அவனுடைய சினேகிதியான ஜார்ஜியானு என்பவள் வாக்காளர்களுக்கு முத்தம் கொடுத்து வோட்டு சேகரித்தாள்! எதிர்த்துப்போட்டியிட்ட அபேட்சகனும் இவ்விஷயத்தைக் கோள்விப்பட்டு, லேடி சாலிஸ்பரி என்பவளை ஒழுங்கு செய்தான். அவளும் வாக்காளர்களுக்கு முத்தம் கொடுத்து வோட்டுச் சேகரித்தாள்!

இருவருடைய முத்தங்களையும் வாக்காளர்கள் பெற்றுக் கொண்டனர். கடைசியில் ஜேம்ஸ்தான் வெற்றி பெற்ருன். காரணம், ஜார்ஜியானுவின் கொள்ளை அழகுதானும்!

## கோழி முட்டையுள் துப்பாக்கிக் குண்டு

கோழி முட்டைக்குள் புத்தம் புதிய துப்பாக்கிக் குண்டு ஒன்று இருந்தது. இதைக்கண்டுபிடித்தவர்கள் வெலிங்டன் நகரிலுள்ள ஒருதம்பதிகள். எப்படி இந்தக் குண்டு கருவுக்குள் வந்தது என்ற மர்மம் எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது.

இதைச் சாதாரண விஷயமாகக்கருதாமல் ஆராய்ச்சியாளர்கள் வெகு அக்கறையோடு முட்டைக்குள் துப்பாக்கிக் குண்டு நுழைந்த மர்மத்தைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிருர்கள்.

## இறந்தவர் தேர்தலில் வெற்றி பெற்ருர்

இந்திய பொதுத் தேர்தல் நடைபெறும் சமயத்தில் ஆந்திர சட்டசபை சபாநாயகரான 81 வயதுடைய திரு காளேஸ்வர ராவ் திடீரென்று மரணமானுர்! ஆந்திரச் சட்ட சபைக்கு விஜயவாடா தொகுதியில் போட்டியிட்ட அவரை எதிர்த்து நான்கு பேர் போட்டியிட்டனர்,

மற்ற அபேட்சகர்களைவிட பதினைந்தாயிரம் வோட்டுகள் அதிகப்படியாகப் பெற்று திரு. காளேஸ்வர ராவ் வெற்றி பெற்ருர் என்ற விபரம் அவர் இறந்த பின்தான் அறிவிக்கப்பட்டது.

## ஒரு கொலைக்குத் தண்டனை 120 வருடச் சிறை!

ஒரே ஒரு உயிரைக் கொலை செய்த குற்றத்திற்காக 458 பேர்கள் தண்டனை அனுபவித்தார்கள்!

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த என்காபின்டே என்ற ஆசாமி, லேவாதேவி செய்பவன். அவன் ஒரு கிராமத்தில் தனக்கு வரவேண்டிய பாக்கியை வசூல் செய்யச் சென்றிருந்த பொழுது, தனக்குப் பணம் தரவேண்டியவர்களைச் சற்றுக் கடுமையாக, காரசாரமாகப் பேசிவிட்டான். இதனுல் ஆத்திரமடைந்த அந்தக் கிராமத்து மக்கள் அவனைக் கற்களாலேயே தாக்கிக் கொன்று விட்டனர்!

இந்தக் கொலைக்கு உடந்தையாக இருந்தவர்களைக் கண்டுபிடித்துக் கூறுமாறு கிராமத்திலுள்ள பூசாரி ஒருவனைத் தென் ஆபிரிக்க அரசாங்கம் வேண்டிக் கொண்டது. பூசாரி விசேஷ பூசைகள் செய்து, கிராமத்திலுள்ள மக்களை இது விஷயமாக விசாரிக்கச் சென்றபோது, 500 பெண்கள் அவன் முன்னுல் வந்து தங்களுக்கும் அந்தக் கொலையில் சம்பந்தம் உண்டு என்று வலியவே கூறினுர்கள்.

1939, ஏப்ரல் மாதம் ஒரு திறந்த வெளி மைதானத்தல் அவர்கள் விசாரணை செய்யப்பட்டனர். அவ்வூர் நீதிபதி விசாரணை நடத்தினுர். அவர்களில் 458 பேருக்கு, கொலைக்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காக மூன்று முதல் ஆறுமாதம் வரைபலவிதமான சிறைத்தண்டனைகள் விதிக்கப்பட்டன. அவர்கள் அனைவருக்கும் அளிக்கப் பட்ட தண்டனை மொத்தம் 120 வருடங்களாகும். 42 பேர்மீது குற்றம் ருஜூவாகாததால் அவர்கள் விடுதலை செய்யப் பட்டனர்!

## அபாயம்! போத்தல் விளக்கு

ஏன்? எப்படி? என்ற பிரச்சினைக் கிடமில்லாமல் விபத்துகள் நிகழ்கின்றன. அவற்றில் சில தவிர்க்கக் கூடியன. சில தவிர்க்க முடியாதவை,

மடியில் குழந்தையைக் கிடத்திக் கொண்டு கஞ்சிவடித்த ஒருதாய் குழந்தையை மறந்து எழுந்திருந்த போது குழந்தை கொதி கஞ்சிக்குள் வீழ்ந்து மரணமடைத்தது.

பிள்ளைக்குப் பால் கொடுத்துக் கொண்டு படுத்துக்கொண்டிருந்த ஒருதாயின் முலை குழந்தையின் முகத்தை அழுத்தியதால் மூச்சுத் திணறி குழந்தை இறந்து விட்டது.

பக்கத்தில் போத்தல் விளக்கை வைத்துக் கொண்டு குழந்தையும் தாயும் தூங்கினுர்கள். திடீரென்று துணியில் தீப்பற்றிக் கொண்டது. குழந்தை இறந்த பின்தான் கும்பகர்ணனின் தங்கை—பெற்றவள் கண் விழித்தாள். இவைகள் சமீபத்தில் நிகழ்ந்த விபத்துக்கள். ஏற்கெனவே பத்திரிகையில் வெளியானவை.

சென்ற ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் போத்தல் விளக்கு விபத்துக்குப் பின் இருவர் பலியானுர்கள். ஒருவர் 24 வயது இளம் பெண். மற்றவர் 56வயதான கைம் பெண்,

வவுனியா உதவி நில அளவை சுப்பிரின்டென் திரு மா. அம்பிகைபாகரின் புதல்வி கமலாசனி என்ற யுவதி விளக்குப் பற்றவைக்கையில் எரிந்து கொண்டிருந்த மற்ருேர் விளக்கு சேலையில் பற்றிக்கொண்டதால் மரணமானுள்.

திருநெல்வேலி தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை மனேன்மணி என்ற பெண் தனியே தூங்கிக் கொண்டிருக்கையில் போத்தல் விளக்கினுல் உடுத்திருந்த சேலையில் தீப்பற்றிக் கொண்டது. இவர் ஆஸ்பத்திரியில் மரணமானுர். போத்தல் விளக்கின் அபாயம் யாவருமறிந்ததே ஆனுல் விபத்துக்குத்தான் குறைச்சலில்லை.

## ஐந்துவயதுச்சிறுமி குழந்தை பெற்ருள்!

ஐந்து வயதுச் சிறுமி ஆறுருத்தல் நிறையுள்ள ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். இச்சம்பவம் தென்அமெரிக்காவிலுள்ள பெரு என்ற இடத்தைச் சேர்ந்த லிமா என்னும் ஊரில் நிகழ்ந்தது. சத்திர சிகிச்சை செய்தே அந்தக் குழந்தையை டாக்டர்கள் வெளியில் எடுத்தனர்.

ஐந்து வயதில் குழந்தையைப் பெற்ற அந்தச் சிறுமியின் பெயர், லினமெடினு என்பதாகும் அவள் பிறந்து மூன்று மாதங்கள் ஆனவுடனேயே அவள் உறுப்புக்கள் பூப்பெய்தி விட்டனவாம்! குழந்தைக்குத் தகப்பன் யாரென்று தெரியவில்லை!

## நூறு வயதுக் கிழவி தாயானுள்

அதே சமயத்தில் மற்ருெரு அதிசயமானசம்பவமும் நடைபெற்றிருக்கிறது. கொலம்பியாவைச் சேர்ந்த பெலியா என்ற நூறு வயதுக் கிழவி, மூப்பத்திரண்டு வயதுடைய ஒரு இளைஞனை மணம் செய்து கொண்டாள். மணம் முடித்த மறு ஆண்டில் அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தது. இந்த அதிசய நிகழ்ச்சி, உலகம் முழுவதிலுமுள்ள டாக்டர்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்துவிட்டது மூப்பெய்தியதும் பெண்கள் குழந்தை பெறும் சக்தியை இழந்துவிடுகிருர்கள் என்ற கருத்தைஇந்தக் கிழவி தகர்த்தெறிந்துவிட்டாள்!

## சிந்திக்கத் தொடங்கினுன்!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமியாயிருக்கும் போதோ, முதுமை வந்துவிட்ட போதோ விற்க முடியாத ஒரு பவித்திரமான பொருளை யுவதிகள் விற்பனைப் பொருளென்று நினைக்கக் கூடாது.

சந்தர்ப்ப சூழ்நிலையில் ஒரு பெண்கற்பை இழந்துவிட்டால் அவளை ஏற்று ஆதரிக்கும் பண்பு ஆண்களிடம் கட்டாயம்அமைய வேண்டும். உதாரணமாக, யுத்த காலத்தில் கத்தி முனையில், கட்டிய கணவன் முன் பே பெண்கள் கற்பை இழந்தார்கள். உடனே அக்கினியை வளர்த்து அவளை இறங்கச் சொல்வதா? கற்பை விலை பேசுவதுதான் அனுமதிக்க முடியாதது என்கிறேன் நான்.

எனக்கு நேரமாகிறது தம்பி. நீ பிரமச்சாரி. கண்ட குப்பைகளையெல்லாம் கிளின்று பின்னுவென்று கூட்டங்களில் பேசாதே. மணமானபின் சிலஅனுபவ உண்மைகள் உனக்குப் புலப்படும். தெளிந்த அறிவோடு சிந்திக்கப் பழகு. நான் போய் வருகிறேன்.

அதீதன்போய்விட்டார். காயத்தை வருடியபடியே முருகவேள் சிந்திக்கத் தொடங்கினுன்.

சேலம்
S. V. R. கண்டர் R. I. M. P. அவர்கள் தயாரிக்கும்
வீரிய விர்த்தி மாத்திரை
மிதமிஞ்சிய உஷ்ணத்தினுலும், அமிதபோகத்தினுலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறந்த வீரிய மாத்திரை.
24 மாத்திரைப்புட்டி ரூ. 7-00
லேபனம் மெழுகு
குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல். தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற் பூசும் மெழுகு.
1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00
தேவைக்கு எழுதவும்:
கன்னையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
Prop: S. M. R. M. S.
ராகலை பஜார், ஆள்க்கருணை.
(சிலோன்) (P. O.)

Registered a newspaper at the G. P. O


# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

**கருணாநிதியின் வெற்றி எனது தோல்வி!**

"கருணாநிதியின் வெற்றி- என்னுடைய தோல்வி!" என்று ஈ. வே. ரா. பெரியார் கூறியிருக்கிறார். தஞ்சாவூரில் போட்டியிட்ட தி. மு. க. கருணாநிதிக்கு எதிராக ஈ. வே. ரா பலமான எதிர் நடவடிக்கை எடுத்தும்கூட கருணாநிதி வெற்றிபெற்றுவிட்டார். அதனால் மனமுடைந்த ஈ. வே. ரா. மேற்கண்டவாறு கூறியுள்ளார்.


பட்டு உடைகள் தண்ணீரில் போடாது சலவை செய்வதும் சாயம் போடுவதும்



SunLight Dyers & DRY CLEANERS

Bus Stand View, JAFFNA

சன்லைற் டையேர்ஸ் & றைக்கிளீனேர்ஸ்
(பஸ்நிலைய முன்பாக) பெரியகடை.
யாழ்ப்பாணம். போன்: 474


# அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க தலைவர் தேர்தலில் மோசடி நடந்ததா?

சமீபத்தில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் திரு கு. வி. செல்லத்துரை மறுபடியும் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரோடு போட்டியிட்ட திரு. த ச. சண்முகதாசன் எட்டு வாக்குகளால் (62-54, தோல்வியடைந்தார்.

இந்திய பொதுத் தேர்தல் உலக அரங்கில் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்திருந்ததோ அத்துணை முக்கியத்துவம், ஆசிரிய வட்டாரங்களில் பெற்றிருந்தது அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தேர்தல்.

தலைவருக்காகப் போட்டியிட்ட இருவருக்கிடையில் நடைபெற்ற பலப்பரீட்சையை அவதானிகள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

வெளி இடங்களிலிருந்து வந்த அங்கத்தவர்களுக்கு 'வழிமறிப்பு' உபசாரம் ஆதரவு தேடும் அபேட்சகர்களிடையே பலமாக நடைபெற்றது என்று கூறப் படுகிறது. கண்ணியமான ஆசிரிய சமுதாயத்துக்கு 'தண்ணி' கூட வழங்கப்பட்டதாம்!

எதிர்க் கட்சியின் நம்பகமான ஆள் ஒருவர் தனது வாக்குச் சீட்டில் வெற்றி பெற்றவரின் பெயரை எழுதி அவருக்குக் காட்டிவிட்டுப் போட்டதைச் சிலர் கண்டார்களாம். இப்படியான 'தகிடுதித்த'ங்களால் வாக்குகளை எண்ணுவதிலும் மோசடி நடந்திருக்கக் கூடும் என்று ஆசிரிய வட்டாரங்கள் கருதுகின்றன!

**'புதினம்'**


**4-3-62 முதல்**

ஓராண்டுக் கட்டணம் ரூபா 10-00

தனிப்பிரதி சதம் 20

விபரங்களுக்கு:

'புதினம்' 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

அப்துல்லா & கோ
அனுமதிபெற்ற
கண் பரிசோதகர்
கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
போன்: 486

நேயர்களுக்கு ஒரு நற்செய்தி!

இந்து முஸ்லீம் கபே

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் றோட்டில் வின்சர் தியேட்டருக் கருகாமையில் 'இந்து முஸ்லீம் கபே' என்னும் விலாசத்துடன் ஒரு போசனசாலையை ஆரம்பித்திருக்கிறோமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

- சுவையான சிற்றுண்டி வகைகளும்
- காப்பி, தேனீர், பானங்களும்

இங்கு கிடைக்கும்.

ஒருமுறை சுவைத்து மகிழுங்கள்!

இந்து முஸ்லீம் கபே
கஸ்தூரியார் வீதி, : யாழ்ப்பாணம்

உபயோகித்தீர்களா?

சிரநேத்திராஞ்சனத் தைலம்

★ சிரசு ★ கண் ★ மூக்கு

சம்பந்தமான சகல வியாதிகளையும்

இமைப் பொழுதில் போக்கவல்லது

இத் தைலத்தில் தினசரி 20 சொட்டு மாத்திரம் உங்கள் சிரசில் இருந்தால் போதும்.

தயாரிப்பாளர்:

மு. க. ஜெகநாதன்
பூநாறி கண் வைத்திய நிபுணர். (பதிவு பெற்றவர்)
பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 270

எங்களிடம் ஆயுள்வேத வைத்தியத்திற்குரிய சகல மருந்துச் சரக்குகளும், நரைமயிர் கறுக்கச்செய்யும், பிரம்மி, கேசரஞ்சனத் தைலமும் (செயர் ஒயில் வகைகளும்,) குரு மருந்துகள், கருணானந்தர் மருந்துகள், தண்டபாணி வைத்தியசாலை மருந்துகள், மற்றும் வாசனைக்குரிய சென்ற், அத்தர் வகைகளும், நயமாகப் பெற்றுக்கொள்ளலாம்,

உங்கள் தேவையைப் பூர்த்திசெய்ய எங்களிடம் விஜயஞ் செய்யுங்கள்.

க. செ. கைலாசபிள்ளை அன் சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்,
76. பெரியகடை, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னாலை தி. ச. வரதராசன்.